# நல்ல தம்பி---(தம்பி)

P. SRINIVASA PILLAI
NEWS AGENT & SNUFF MERCHANT
SHIYALI

22—4—56 வார வெளியீடு விலை 2 அணா


"நம்ப நேரு"

★

துலாபாரம்

★

ஊர் வலம்



சென்னை வண்ணையம்பதி தியாகர் கல்லூரி கலைமன்றத்தில் அண்ணாதுரை தலைமையில் திருமணம் செய்துகொண்ட செல்வி இராணி-(தி. மு க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசனின் மகள்) செல்வர் கலைச்செழியன் (திரு ஞாயிறு இராசாவின் மகன்) தம்பதிகள்.

மணமக்களை வாழ்த்தி பி. டி. இராசன், சின்ன அண்ணாமலை, கா. மு. ஷரீப், ஜி. உமாபதி, மயிலை. சிவமுத்து, ஈழத்தடிகள், கா. அப்பாதுரை, டி. சண்முகம் எம். எல். ஏ., ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., என். ஜீவரத்தினம், கே. கோவிந்தசாமி, காஞ்சி. கலியாணசுந்தரம், ஆர். எஸ். பாண்டியன், கே. ஆர். இராமசாமி, எம். ஜி. இராமச்சந்திரன், பேபி. கந்தசாமி எம். பி., எஸ். எஸ். இராசேந்திரன், சத்தியவாணிமுத்து, அருண்மொழி, இரெ. இளம்வழுதி, பி, சிற்றரசு, க. அன்பழகன், கே. ஏ. மதியழகன், ஈ. வெ. கி. சம்பத், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பேசினர்.

தோழியர் கஸ்தூரி, நாகூர் அனீபா இசை விருந்தும் ராணி-ரமணி சகோதரிகளின் ட்டியமும் நடைபெற்றது.

மணமக்கள் எல்லா நலனும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.




தமிழகத்தோடு சேர்க்கப்பட விருக்கும் நாஞ்சில் பகுதிகளான தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு தாலுகாக்கள் தனி மாவட்டமாக அமைக்கப்படுமென்றும் அதற்கு **கன்னியாகுமரி மாவட்டம்** எனும் பெயரிடப்படுமெனவும் நாகர்கோவில் செய்தியொன்று கூறுகிறது.

*

திரைப் படங்களை உருப்படாமல் அடித்து வருகிறார்களல்லவா, தணிக்கைபோர்டு ஒன்றை வைத்து! இப்போது அந்தத் தணிக்கை போர்டுக்கு இன்னொரு அதிகாரமும் தரவேண்டும் என்று அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி முடிவு செய்துள்ளது. அதாவது, கதை வசனங்களை எழுதும்போதே அவைகளை வாங்கி 'கத்தரிக்கோல்' செய்யவேண்டுமாம்! பேச்சுரிமை, எழுத்துரிமைக்குத் தடைபோட, காங்கிரஸ் காரியக் கமிட்டியே முன்வருகிறதே என்று ஆச்சரியப்படுகிறீர்களா? இப்படி காங்கிரஸ் தலைமையிடம் முடிவுசெய்திருக்கும் இச்சமயத்தில், நமது மாநில முதல் நீதிபதி இராசமன்னார் முன்போர் முறை, சென்சார்போர்டு மூலம் செய்யப்படும் தணிக்கையைப் பற்றிக் காரசாரமாகக் கண்டித்த சேதி நினைவிலிருக்கிறதா, உங்களுக்கு? நீதி மன்னர்களும் அறிஞர்களும் கண்டிக்கின்றனர்! ஆனால் காங்கிரஸ் மேலிடம் வாய்ப்பூட்டு போடுவதில் வெகு மும்முரமாயிருந்து வருகிறது!!

*

சிறுவர்களின் விளையாட்டுப் பொம்மைகளைத் தயாரிப்பதில் நமது மாகாணங்களிலுள்ளவர்கள் மிகத்திறமையோடு விளங்குகிறார்களாம். இதனால், வெளிநாடுகளில் இந்தியப் பொம்மைகளுக்கு மிகவும் கிராக்கி ஏற்பட்டுள்ளதாம். தமிழகத்திலும் 'பண்ருட்டி' 'தஞ்சாவூர்' பொம்மைகள் மிகவும் பிரசித்தமானவையாகும். இப்படி பொம்மைகள் தயாரிப்பவர்கள், புதுமையான முறைகளைக் கையாண்டு நவீன விஞ்ஞானக் கருவிகளைப் போலப் பொம்மைகளைச் செய்யத் துவங்கினால் அருமையான ஒரு குடிசைத் தொழிலாகும் வாய்ப்பு இருக்கிறது. பலர், வாழவும் முடியும். வாய்ப்பிருப்போர், செய்யலாம்.

*

மத்தியதர மக்கள் வாழும் பல குடும்பங்களில் அப்பளமும், வடகங்களும் இன்றியமையாதனவாகும்! ஒரு குடும்பத் தொழிலாகப் பலர், இதனைச் செய்து வருகின்றனர். இப்படி, இங்கே செய்யப்படும் அப்பளங்களுக்கு வெளி மாகாணங்களில் ஏகக்கிராக்கியிருக்கிறதாம். அதனால் இப்படி அப்பளங்களைச் செய்வோருக்கு உதவி செய்யும்படி சென்னை சர்க்காருக்கு ரூபாய் 13,096 (ஏ! அப்பா! டில்லியின் கருணையே கருணை) அனுப்பியுள்ளதாம் டில்லி. இந்தப் பணமும், நம்முடைய ஏழை எளியதுகளுக்குப் பிரித்து உதவப்படுமா அல்லது 'அம்மாமி'களுக்குமட்டும் அளிக்கப்படுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்!

*

கடந்த கிழமை சென்னையில் சிறப்பாக நடைபெற்றதாம், பால் வாரம். அப்போது பால் அருந்துவதின் அவசியம் பற்றி பக்தவத்சலமும் பலரும் பேசினார்களாம்! பாலின் அருமையைப் பற்றி இவர்கள் என்னபேசுவது? என்கிறீர்களா. உண்மைதான், சோற்றுக்கே திண்டாடும், லட்சோப லட்சம் மக்கள் வாழும் நாட்டில் பாலின் அருமை சொல்லவும் அதை அருந்தவும் எப்படி முடியும் ஏழைகளால்? இந்த இழிநிலை போவதற்குமுன்பு, என்ன பேசித்தான் யாது பயன்!

*

ஆரிய திராவிடப் பிரச்னை பற்றி கிளம்பியுள்ள அரசியல் எழுச்சியைக் குறைவாக மதிப்பிட்டுவிடக்கூடாது. அதைப் பற்றிய ஆராய்ச்சிகளை, சரித வல்லுநர்கள் அவசியம் செய்ய வேண்டும் என்று சில தினங்களுக்கு முன் சென்னை கவர்னர் பிரகாசா தெரிவித்தாரல்லவா? அதைப் படித்தாரோ என்னவோ, சென்னை முன்னாள் நீதிபதியான வி. பாஷ்யம் அய்யங்கார், கோவையில் 12-ந் தேதி பேசுகிறபோது, இராமாயணத்தை எந்த வகையிலும் ஆராய்ச்சி செய்யக்கூடாது என்கிறார். அது பாபமாம்! "சமுத்திரம் போன்றது, இராமாயண காவியம். அதில் குளித்து முழுகி எழலாமே தவிர என்ன ஏது என்றெல்லாம் ஆராய்ச்சி செய்யக்கூடாது" என்கிறார். இப்படிச் சொல்லுபவர் உயர்நீதி மன்றத்து நீதிபதியாக இருந்தவர்!

*

இலங்கையில் தோழர் பண்டார நாயகாவின் தலைமையில் அமைந்திருக்கும் புதிய மந்திரி சபையில் தொழிலாளர் மந்திரியாக இருக்கும் பி. டி. இலங்காரத்னம், சர்க்கார் குமாஸ்தாவாக இருந்தவராம்! 1947-ல் நடைபெற்ற சர்க்கார் குமாஸ்தாக்களின் வேலை நிறுத்தத்தின்போது டிஸ்மிஸ் செய்யப்பட்டவராம் அவர். சினிமாவுக்கு கதை வசனம்கூடத் தீட்டியிருக்கிறாராம் அவர்.

*

ரஷ்யத் தலைவர்கள் புல்கானினும், குருஷ்சேவும் கல்கத்தா நகரில் தங்கியிருந்த ஒவ்வொரு மணி நேரத்துக்கும் பத்தாயிரம் ரூபாய் வீதம் செலவாயிற்றாம், மேல்வங்க சர்க்காருக்கு. அவர்கள் தங்கியிருந்த மொத்தம் 50-மணிநேரத்துக்கும் ரூ. 5-லட்சம் ரூபாய் செலவாயிற்றாம். எவ்வளவானால் என்ன! அவர்களின் வருகையில், இங்குள்ள கம்யூனிஸ்டுகளின் போக்கே மாறியிருக்கிறதே, அதைப்பார்க்கிறபோது எவ்வளவு செலவானால் என்ன என்று கேட்கக் கூடும் தேசிய நண்பர்கள்!!

ஆண்டுச் சந்தா
ரூ. 7

மலர் 14
இதழ் 42
22—4—56

# தோலைக் கடித்து....

ஊர்ப் பெயர் மாற்றம் ஒரு பிரச்சினையாகி விட்டது! உலகிலே எத்தனையோ பிரச்சினைகள் இருக்க, இந்த உதவாக்கரைகளுக்கு ஒரு ஊரின் பெயரை மாற்றுவது மாபெரும் பிரச்சினையாம்! — இவ்விதம் சிலர் கூறினர்.

ஊர்ப்பெயர் மாற்ற வேண்டியதற்குக் காரணம் கூட இருக்கலாம் — ஆனால் அதை எடுத்துரைக்க வேண்டுமானால் அதற்கான யோக்யதை வேண்டாமோ? போக்கிடமற்றவர்களெல்லாம் இப்படிப் பட்ட பிரச்சினைகளை எடுத்துக்கொண்டு பேசுவதும், எழுதுவதும், கிளர்ச்சி நடத்துவதும், எப்படி மதிப்புள்ளதாகக் கருதப்பட முடியும்!—இவ் ிதம் வேறு சிலர்.

கரடியாய்க் கத்தட்டும், யார் காதிலே போட்டுக் கொள்ளப் போகிறார்கள்!

அறப்போராம் அறப்போர்; நடத்தட்டுமே, யார் சட்டை செய்வார்கள்?

அடிபட்டோம், உதைபட்டோம், சிறைப் பட்டோம் என்று கதறுகின்றன, இதனைக் கண்டு கலங்கப்போவதுமில்லை, கவலைப்படப்போவதுமில்லை, இணங்கப்போவதென்பது இம்மியளவும் கிடையாது என்று ஆணவம் பொழிந்தனர் மற்றும் சிலர்.

கல்லக்குடி, டால்மியாபுரமாகி இருப்பது, அவமானம், அதனைக் குருதிகொண்டேனும் கழுவிட வேண்டும்; டால்மியாபுரம் என்று தமிழகத்திலே ஒரு ஊர்ப்பெயர் இருப்பது' வடநாட்டு ஆதிக்கத்துக்கு வளைந்து கொடுக்கிறோம், முதலாளிக்கு முறிச்சீட்டு எழுதிக் கொடுக்கிறோம் என்றல்லவா பொருள் படும், எனவே, டால்மியாபுரம் கல்லக்குடியாக மாற்றி அமைக்கப்படவேண்டும்—தமிழகத்தின் தன்மானம் பாதுகாக்கப்படவேண்டும் என்று நமது கழகம் நாட்டுக்கு எடுத்துரைத்தது, நல்லோர் 'ஆம்' என்றனர், நாடாள்வோர் கவலையற்று இருந்தது கண்டு, பெயர் மாற்றத்துக்கான அறப்போர் நடத்தப்பட்டது. கருணாநிதியின் அணிவகுப்பு ஆற்றலுடன் அப்போரில் ஈடுபட்டது-சிறை வைக்கப்பட்டனர் செந்தமிழ்க் காவலர்கள்—தடியடிக் கொடுமைக்கு ஆளாயினர் தமிழர் தன்மானம் காத்திடக் கிளம்பிய கடமை வீரர்கள்—துப்பாக்கியே உறுமிற்று—உயிர்ப் பலிகொண்டது.

கண்ணியவான்கள் கண்ணீர் வடித்தனர்—நட்டமோ கஷ்டமோ இல்லாததோர் பிரச்சினை, நியாயம் நிரம்ப இருக்கிறது—இதற்கு ஏன் ஆளவந்தார்கள் அர்த்தமற்ற பிடிவாதம் காட்டவேண்டும் — வடநாட்டு முதலாளியின் பெயரை இங்கோர் இடம்தாங்கித் தீரவேண்டுமோ—வடக்கே ராஜாஜி நகரோ—காமராஜர் சதுக்கமோ—பக்தவத்சலம் பாதையோ உண்டா! ஏன் சொரணையற்ற தன்மையில், வடநாட்டு முதலாளியின் பெயர் கொண்ட அவமானச் சின்னத்தைத் தமிழகம் சகித்துக்கொள்வது-பெயர் மாற்றமே நியாயம் என்று அரசியலில் பெருந் தன்மைக்கும் இடமிருக்கவேண்டும் என்று எண்ணிய, திண்ணிய உள்ளத்தினர் எடுத்துக் கூறினர். ஆளவந்தார் இணங்கினாரில்லை. அரசியலில் 'அசூயை' தான் அடிப்படை வலிவளிக்கும் என்ற கோட்பாட்டினைக் கொண்ட குணாளர்கள்

பார்! பார்! இதுகளுக்குப் படுதோல்வி.

யார் இதுகளை மதிப்பார்கள்.

என்னவாயிற்று கல்லக்குடி போராட்டம்?

என்றெல்லாம் கேலி பேசினர்.

சுட்டுவிரல் காட்டி நம்மைக் கேலி செய்தவர்கள் இன்று முக்காடிட்டு மூலையில் அமர்ந்து, நமக்கும் அதுதானா கதி—நமது மூக்கையும் அறுத்துவிட்டனரே—என்று கூறிக் குமுறுகின்றனர்.

பழமொழி உண்டல்லவா, தோலைக் கடித்து, துருத்தியைக் கடித்து, ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்துக் கடைசியில வெறி நாய் மனிதனையே கடித்தது, என்று: அதுபோல், கல்லக்குடி கிடையாது, இதற்கோர் கிளச்சி நடத்தினால் யார் கவனிப்பார்கள், இதென்ன பொருளற்றதோர் போர்; எந்த இடத்துக்கு என்ன பெயர் இருந்தால் என்ன என்று ஆளவந்தார்கள் பேசினபோது, நம் தி. மு, க. ஏசப்படுகிறது ஏளனத்துக்கு ஆளாகிறது, அலட்சியப் படுத்தப்படுகிறது என்றெண்ணி,குதூகலம்கொண்டனர்-இப்போது கல்லக்குடிபிரச்சினையின்போதுகிளம்பிய கண்மூடித்தனமான பிடிவாதம், எவரையும் மதித்திடாத போக்கு, எந்தக் கிளர்ச்சிக்கும் இணங்க மறுத்திடும் இறுமாப்பு, இப்போது, பெரிய கட்சி, தனக்கே உரிய வீரதீரத்துடன் துவக்கிவைத்த கோரிக்கையையும், ஆளவந்தார், அலட்சியப்படுத்திவிட வழிசெய்துவிட்டது.

தோலைக் கடித்தபோது, ஆள் நமக்கென்ன என்று இருந்திடவே, இப்போது ஆணவம் ஆளையும் கடிக்கிறது — ஐயயோ! என்னையுமா என்று கேட்டு அலறக் காண்கிறோம்.

கல்லக்குடி கிளர்ச்சியைக் கேலி செய்தனர்—அதனை முன்னின்று நடத்தினவர்கள், நாம் என்பதற்காக.

(5ம் பக்கம் பார்க்க)

# ஊர்வலம்

['ஞானக்கண்' பேட்டி]

வானளாவிய பனி மலைகள்! பசுமையான சோலைகள் எங்கும்! பளிங்குத்தடாகங்களும் வெள்ளி நீரோடைகளும் மலிந்த மலர்வனம்! பனி ஆறுகள்! உல்லாசபுரியாகத் தோற்றமளித்தது, காஷ்மீர் — அங்கேயுள்ள ஒரு சிறை மாளிகையில் நான் பேட்டி காணப்போயிருந்த ஷேக் அப்துல்லா இருந்தார்.

"ஷேர்-இ-காஷ்மீர், சலாம்" என்றேன், நான். என்னைக் கூர்ந்து பார்த்துவிட்டு, "எங்கே, தமிழ்நாட்டிலிருந்தா வருகிறாய்?" என்றார். 'ஆம்' என்றேன். "ஆமாம்! சிறைக்குள் எப்படி வந்தாய்? என்னைச் சந்திக்க அனுமதிக்கமாட்டார்களே உன்னை" என்றார்.

"நான், ஞானக்கண். எனக்கு யாருடைய அனுமதியும் தேவையில்லை. எங்கு போகவேண்டுமோ, அங்கு போய் வருவேன். என்னை யாராலும் தடுக்கமுடியாது" என்றேன்.

"அப்படியா!" என்று கேட்டுவிட்டுச் சிரிக்க முயன்றார், அவர். ஆனால் முடியவில்லை. ஆயினும், சமாளித்துக்கொண்டு, "என்னை ஏன் பேட்டி காண வந்தாய்?" என்றார்.

"காஷ்மீரச் சிங்கமே! ஏன், தங்களுக்கு இந்த நிலை வந்தது? நேருவின் அத்யந்த நண்பனாக இருந்த தங்களைக்கூட சிறையிலடைக்க அவர் மனம் எப்படித்துணிந்தது?" என்றேன்.

"ஞானக் கண்! நேருவைப்பற்றி நன்றாக அறியாமல் நான் மோசம் போனேன். இல்லையென்றால், இத்தனை நாளும் எனது காஷ்மீர் எப்படியிருக்கும் தெரியுமா?" என்றார்.

"தாங்கள் செய்த தவறு என்ன?"

"நேரு, காஷ்மீரைத் தன் கைவசம் வைத்திருக்க வேண்டுமென விரும்பினார். நானோ, காஷ்மீர் தனி நாடாக விளங்கவேண்டுமென்று கருதித் திட்டம் தீட்டலானேன். அது, அவருக்குப் பிடிக்கவில்லையென்றதும், எனது நண்பர்களைத் தூண்டிவிட்டு என்னைச் சிறையில் பூட்டிவிட்டார்"

"தாங்கள் 1939 வரையில் நடத்திவந்த முஸ்லீம் மகாசபையை நேருவின் பேச்சைக் கேட்டுத் தானே தேசிய மகாசபையாக மாற்றினீர்கள்?"

"ஆமாமாம்! அந்தப் பழைய கதையை ஏன் கேட்கிறாய். நேருவை நம்பி, என்னென்னவோ செய்தேன். தியாகங்கள் பல செய்து மக்களிடம் நான் சேர்த்திருந்த செல்வாக்கையெல்லாம் கொண்டு, அவர் சொன்னபடியெல்லாம் செய்தேன். இப்போது, சிறையில் கிடக்கிறேன்......"

"மன்னரின் பிடியில் சிக்கிக்கிடந்த காஷ்மீர மக்களை விடுவிக்கத் தாங்கள் போராட்டம் நடத்தியபோது காஷ்மீர் ராஜா உங்களைச் சிறையில் போட்டுப் பூட்டினாராமே!

"ஆமாமாம்! விடுதலைக்குப் போராடியபோது, என்னை ராஜா, சிறையில் பூட்டினார். இப்போது அந்த ராஜா, நேருவுடன் குலாவுகிறார். நாட்டுக்குப் பாடுபட்ட நான் சிறையில் கிடக்கிறேன்."

சோகமாக இருந்தது அவர் சொல்வதைக் கேட்க. காஷ்மீரச் சிங்கம்! அப்பப்ப, அவருக்கு மக்களிடமிருந்த செல்வாக்கு என்ன? சிறப்பென்ன! இன்று, நேருவுக்குக் கட்டுப்பட்ட 'குலாம்! களால் அவர்படும் கஷ்டம் என்ன' —என்று எண்ணியபோது, உண்மையாகவே வருத்தமாயிருந்தது எனக்கு. ஷேக் அப்துல்லாவை சிறையில் பூட்ட நேரு பண்டிதர் தான் காரணம் என்று எண்ணியபோது உண்மையில் கலக்கமாகவேயிருந்தது எனக்கு. காஷ்மீரைத் தனி நாடாக ஆக்க முயன்றார் என்றதும் நட்பு, அன்பு, எல்லாம் எங்கே போய்விட்டது பார்த்தீர்களா நேரு பண்டிதருக்கு? அவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு, கிளம்பினேன், காஷ்மீரத்தைச் சுற்றிப் பார்க்க.

* * *

எழுபது இலட்சம் மக்கள் தொகையும், 84,471 சதுரமைல் பரப்புக் கொண்டதுமான காஷ்மீரம், ஜம்மு—காஷ்மீர்—எல்லைப்புறம் எனும் மூன்று மாவட்டங்களைக் கொண்டதாகும். வடகிழக்கே திபேத்தும், வடக்கே சீன சிங்கியாங்கும், வடமேற்கே ரஷ்யாவும், மேற்கே பாகிஸ்தானும், தெற்கே இந்தியாவும் காஷ்மீரத்தின் எல்லைகளாகும். இப்போது, காஷ்மீரத்தின் வடபகுதி பாகிஸ்தானின் ஆதரவாளர்கள் வசம் உள்ளது. அங்கு, போனேன். இரண்டுமுஸ்லீம்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டு, அவர்களருகில்போய் மறைந்து நின்றேன்! காஷ்மீரத்தின் பெரும்பான்மையான மக்கள், முஸ்லீம்கள் தானே?

"ஏன் இப்படி, இந்த நேரு பிடிவாதம் பிடிக்கிறார்? முஸலீம்களாகிய நாம், நமது இஷ்டப்படி வாழ்ந்துவிட்டுப்போவதில் அவருக்கென்ன சங்கடம் வந்தது?"

"அதெப்படி! அவருடைய தாயாதிகளும்கூட காஷ்மீரத்தைச் சேர்ந்தவர்கள்தானாமே..."

"அதற்காக! நம்மைக் கட்டுப்படுத்த இவர் யார்?"

"நம் விருப்பப்படி விட்டால், நாம் எங்கே யோய்ச் சேர்வோம் என்பது அவருக்கும் தெரியும். அதனால்தான் இவ்வளவு தூரம், காஷ்மீரத்துக்காக வாதாடுகிறார்"

*

இந்தக் காஷ்மீரத்துக்காகப் போராடிக்கொண்டிருக்கும் இந்தியப் படைகளைப் போய்ப் பார்த்து வரலாம் என்று ஜம்மு பக்கம் வந்தேன். என்ன விந்தை! அங்கே நமது தமிழ் வீரர்களும் இருந்தார்கள். அவர்களுக்கு என்னைப் பார்த்ததும் ஒரே ஆனந்தம். கட்டிக்கொண்டு கூத்தாட ஆரம்பித்துவிட்டார்கள்.

"கொஞ்சம் பொறுங்கள்" என்றேன்.

"எப்படிப் பொறுக்கமுடியும்? இங்கே வந்து எத்தனை ஆண்டுகளாயிற்று தெரியுமா? வடநாட்டு ரொட்டியும், பனியும் எங்களை என்ன பாடுபடுத்துகிறது தெரியுமா? இந்தியாவுக்குச் சுதந்திரம் வந்து சுபீட்சமாக வாழ்வதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், 1947 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20ந் தேதி முதல்—அதாவது சுதந்திரம் வந்த மூன்றும் மாதமே—இங்கே ஆரம்பமான சண்டை, இன்னும் நிற்கவில்லை. பாகிஸ்தான் படைகள் நுழைந்ததைக் காட்டி, உடனே காஷ்மீர மன்னர், இந்தியாவுடன் சேர்வதாகச் சொன்னார். அவர் சொன்னதும், நேரு

எங்களை இங்கே அனுப்பினார். அன்று முதல், இன்னும் சண்டை ஓயவில்லை. ஒன்பது ஆண்டுகள் ஓடிவிட்டன. இந்தச் சண்டைக்காக எவ்வளவு பணம் செலவாயிருக்கிறது தெரியுமா? எத்தனை பேர் நம்மவர்களில் செத்துப்போயிருக்கிறார்கள் தெரியுமா?" என்று என்னிடம் குறைபட்டுக்கொண்டார்கள்.

"தமிழனே! உன் தலைவிதி இதுவா?" என்று எண்ணிக்கொண்டு, டில்லிக்குப் போனேன்.

*

மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று ராமலீலா திடலில் நடந்து கொண்டிருந்தது, 13-ந்தேதி பண்டித நேரு பேசிக்கொண்டிருந்தார், காஷ்மீரத்தைப்பற்றி. என்ன பேசினார் தெரியுமா?

"நான் ஒரு சமரசத்துக்கு வரவிரும்புகிறேன். போர்நிறுத்த எல்லைக்கு வடக்கேயிருக்கும் பகுதியைப் பாகிஸ்தான் எடுத்துக்கொள்ளட்டும். தெற்கே யிருக்கிற பகுதியை நாம் எடுத்துக்கொள்வோம். இப்படி காஷ்மீரத்தை இருபிரிவுகளாகப் பிரிப்பதைத் தவிர வேறுவழியில்லை"

கண்ணைத்துடைத்துக்கொண்டு நேருவா இப்படிப்பேசுகிறார் என்று பார்த்தேன். ஆமாம், நேருதான் பேசிக் கொண்டிருந்தார். காஷ்மீரத்தை இழக்க ஒருபோதும் சம்மதிக்க மாட்டோம் என்று கர்ச்சித்த நேருதான் இப்படிப்பேசினார்! காஷ்மீரத்தைத் துண்டாக்கிப் பங்கு போட்டுக் கொள்ளலாம் என்று பேசுகிறார்!!

பொதுவாக்கெடுப்பு எடுத்து மக்கள் இந்தியாவில் சேர்வதாயிருந்தால் சேரட்டும்; பாகிஸ்தானில் சேர்வதாயிருந்தால் சேரட்டும் என்று இத்தனை நாளும் சண்டப் பிரசண்டம்செய்தவரா, இப்படிச் சொல்லுகிறார்!

*

"காஷ்மீரம் என்ன கடைச்சரக்கா? அங்குவாழும் மக்களென்ன மண்பிண்டங்களா! அவர்களைப்பற்றி முடிவுசெய்ய நாம்யார்? பொதுவாக்கெடுப்பு எடுபபது பற்றி எத்தனையோ தடவைகள் கர்ச்சித்தாரே, நேரு—அது எங்கே போயிற்று?" என்று பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி அமீதுல்—ஹக்—சௌத்ரி, சொல்லிக்கொண்டிருந்தார். அவருடைய குரலில் தொனித்த தெம்பைக் கண்டதும் எனக்கு வியப்பாயிருந்தது! சௌத்ரீபேசுவதுபோல முன்பெல்லாம் நேருபண்டிதர்தான் பேசுவார். இப்போது, இவர்சாரீரம் கம்முகிறது! அவர் குரல் வலுக்கிறது!!

இந்த அழகில் ஒன்பதாண்டுகள் ஓடிவிட்டன. இதுவரையில் ஐ. நா. வலுக்கிறது!! சபைத் தகராறுகள் போர் முழக்கங்கள் இவைகளுக்காகச் செலவான பணம்நம்வீட்டுச் சொத்து! இந்தஅழகிலிருக்கிறதே நேருவின் துரைத்தனம் என்று எண்ணிக் கொண்டு கிளம்பினேன்-தமிழகத்துக்கு! இங்கேவந்துபார்த்தால், நம்ம அண்ணாத்தைகள் இன்னும் வடக்கையே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது!!

*

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் கவனித்திருக்கலாம்-நாம் சாமான்யர் என்பதற்காக பிரச்சினையின் தரத்தைக் குறைத்து மதிப்பிட்டிருக்கத் தேவையில்லை.

கல்லக்குடி. கிளர்ச்சியை கண்ணியத்துடன் ஆதரித்து ஆளவந்தார்க்கு நல்லறிவு கொளுத்தியிருந்தால், நாட்டின் நற்பண்பு மேலோங்கி இருக்கும் என்பதுடன். நாடாள்வோர், ஆணவப் போக்கினை மக்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்ற பாடம் பெற்றிருப்பர்.

கண்ணீர்த் துளிகளுக்கு ஒரு வெற்றி கிடைப்பதா — இந்த கண்களால் அதைக் காண்பதா! ஆயிரம் டால்மியாபுரங்கள் அமையட்டும் — தாங்கிக்கொள்ளலாம், சகித்துக் கொள்ளலாம், ஆனால் இதுகளுக்கு கிளர்ச்சியில் வெற்றி கிட்டுவதா, எப்படி அதனைக் கண்டு சகித்துக் கொள்வது — என்ற பெருநோக்குடன் பணியாற்றினர் — இன்று, ஆளைக் கடிக்கிறது, தோலைக் கடிக்கத் தொடங்கிய வெறி.

கல்லக்குடிக்கு ஏன் டால்மியாபுரம் என்ற பெயர் என்று கேட்டுக் கிளர்ச்சி நடத்தினோம்—கேலி செய்யப்பட்டோம் — காலம் கடுமையானதோர் ஆசானல்லவா, பாடம் கற்பிக்கிறது. தமிழ் நாடு என்ற பெயர் கிடையாது, தமிழ்நாடு என்பதற்கு சென்னை ராஜ்யம் என்றுதான் பெயர் இருக்கும் — பெயர் மாற்றத்துக்காக ஆதாரம் காட்டினாலும் காரணம் விளக்கினாலும், வேண்டிக்கொண்டாலும், எச்சரிக்கை விடுத்தாலும் கிளர்ச்சி போர் என்றெல்லாம் மிரட்டினாலும், அசைந்து கொடுக்க மாட்டோம், சென்னை ராஜ்யம் என்றே தான் பெயர் இருக்கவேண்டும் என்று செருக்குடன் கூறிவிட்டனர் ஆளவந்தார். கல்லக்குடியில் நமக்குத் தோல்வி கிடைத்திடவேண்டும் என்று தொழுகை நடத்தியும். தூது சென்றும் வெற்றிகண்ட வித்தகர்கள், இன்று, தமிழ்நாடு என்றே பெயர் இருக்கவேண்டும், இல்லையேல் தீக் கெட்டும் தீ பரவும், உலகு திடுக்கிடக் கூடிய வீர தீரப் போர் கொப்பளிக்கும் என்றெல்லாம் பெரியார் எச்சரித்தும் கூட தோல்வியே ஏற்படுவது சாண்கின்றனர்.

நாம் சாமான்யர்கள் — 'ஒஹோ' என்று வாழ்பவர்களல்ல, உலகம் வியந்திடும் வீரர் கோட்டம் அமைத்தோரல்ல — நாம் எடுத்துக்கொண்ட கல்லக்குடி பிரச்சினையோ, அவர்கள் அகராதிப்படி சொத்தை! சரி! அதிலே நமக்கு வெற்றி கிட்டவில்லை — மதிப்பார் யார் இதுகளை? என்று கேலி பேசியும் காட்டினர்.

இப்போது பெரியாரே அல்லவா துந்துபி முழக்கினார், தமிழ்நாடு என்றுதான் பெயர் இருக்கவேண்டும் என்று.

கல்லக்குடிக் கிளர்க்சிக்கு என்ன பதிலோ, அதுவேதான் உமக்கும் என்றல்லவா காமராஜர் கூறிவிட்டார்! என்ன செய்யப்போகிறார்கள், நம்மை ஏளனம் செய்ததவர்கள்?

*யார் என்ன கூறினாலும் தமிழ் நாட்டை 'சென்னை' என்றோ, அதன் அபூர்வமான மொழி பெயர்ப்பாகிய மெட்ராஸ்என்றோ அழைப்பதுவடிகட்டிய முட்டாள் தனமாகும். இதற்குப் பொறுப்பு இன்றைய ஆட்சியேயாகும்.*

—விடுதலை

## முட்டாள்தனம்! ஆட்சிதான் இதற்குப் பொறுப்பு;!

கடுமையான கண்டனம், சந்தேகமில்லை.

ஆனால், இப்படிக் கண்டிப்பதால் தமிழ்நாடு என்று பெயர் கிடைத்துவிடுகிறதா? இல்லையே!

கண்ணீர்த்துளிகள் கல்லக்குடியில் வெற்றிபெறவில்லை, நாங்கள்......... என்ற வீராவேசப் பேச்சுக்காகவாவது, ஆளவந்தாரின் ஆணவப் போக்கை எதிர்த்திடக் கிளம்ப வேண்டும்.

அழைத்தால், முறையும் நெறியும் அறிந்து முகாமிலிருந்து பணியாற்றவும், தேவையில்லை என்றால், தோத்தரித்துத் தொலைவில் நிற்கவும், வெற்றி பெற்றால் வாழ்த்தவும் வணங்கவும் திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது!

தீரர்கள் என்ன செய்யப் போகிறார்கள்.

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து இப்போது ஆளையே கடிக்கிறது ஆணவம்!

வலியாவது போக்கை மாற்ற வேண்டாமா?

மாறுமா?

பார்ப்போம்!

★

# கோபுரத்துக் குரங்கு

ஏவிச் சிங்காரித்துக்கொண்டு கோயிலுக்குச் செல்லும் குமாரி, அழகி, பிறர் கண்டு மெச்சத்தக்க குணவதி என்பது ஊராருக்குத் தெரியும்; கோபுரத்தின்மீது குந்திக் கிடக்கும் மந்திக்கு என்ன தெரியும்? குமரி உள்ளே நுழைவது கண்டு, கோபுரத்தின்மீதுள்ள குரங்கு, கோணற்சேட்டை செய்கிறது—தன்னை, அந்தத் தையல் ஏதோ மெத்தச் சட்டை செய்வது போல் எண்ணிக்கொண்டு, அவளைப் பார்த்துப் பல்லைக் காட்டுகிறது, முகத்தைக் கோணலாக்கிக் கொள்கிறது.

என்னைப் பார்! என் அழகைப் பார்! எனக்கு நீ ஈடா? — என்று கேட்பதுபோலப் பார்க்கிறது!!

தரையிலே நடந்து செல்கிறாய், அன்ன நடை, மின்னலிடை என்றெல்லாம் உன்னைப்போய் சிலர் புகழ்கிறார்கள் — உண்மை அறியாத உலுத்தர்கள். என்னைப் பார், எவ்வளவு சாமர்த்தியமாகத் தாவிக் குதிக்கிறேன், இந்த என் திறமை உனக்கு உண்டா? என்று கேட்பதுபோலக் கிச்சிடுகிறது.

உன்னைக் காட்டிலும் நான் மேல் தெரியுமா? நீ, கேவலம் மண்ணிலே அல்லவா நடந்து செல்கிறாய், நான் பார், எவ்வளவு உயரத்தில் அமர்ந்திருக்கிறேன்—கோபுரத்தின்மீது!!—என்று கேட்பதுபோலக் குறும்புச்சேட்டை புரிகிறது.

ஏதும் செய்யாதிருந்தாலே, குரங்கு அவலட்சணம், குறும்புச் சேட்டையும் செய்தால் எப்படி இருக்கும்!

குமரி என்ன செய்வாள்? கோபுரத்துக் குரங்கு செய்யும் குறும்புச் சேட்டையைப் பார்த்துச் சிரித்தபடி, கோயிலுக்குள்ளே சென்றுவிடுகிறாள்!

நிதி அமைச்சர் சுப்ரமணியம், தமிழகத்தின் தலைசிறந்த பண்பாளர் என்று அனைவரும் போற்றிப் புகழ்ந்திடும், பி. டி. இராஜனை, சட்டசபையில் மட்டரகமாகக் கண்டித்துப் பேசினார்! பி. டி. இராஜனை, இதுபோல், இழித்தும் பழித்தும் பேசிட, இதுவரை எவருக்கும் மனம் வந்ததில்லை—கருத்து வேற்றுமை, கட்சி வேற்றுமை கொண்டோர் பலரும், அவரிடம் குடிகொண்டுள்ள கண்ணியத்தைக் கண்டு, மட்டு மரியாதை பெற்று, பண்பு குன்றாவண்ணம் தான் பேசிவந்தனர். நிதிக்கும் மதிக்கும் அமைச்சராகியுள்ள சுப்ரமணியனார்தான், பி. டி. இராஜனை மட்டரகமான முறையிலே கண்டித்துப் பேசினார். பி. டி. இராஜன், பதிலேதும் கூறவில்லை — பதறக்கூட இல்லை—கோபுரத்துக்குரங்கு செய்யும் குறும்புச் சேட்டைகண்டு கோயிலுக்குச் செல்லும் குமரி, சிரித்துவிட்டுச் செல்வதுபோல, பி. டி. இராஜன், அடக்க ஒடுக்கம் அறியாமலுள்ள அமைச்சரின் பதட்டமான பேச்சைக் கேட்டுவிட்டு, பதிலேதும் கூறாது, வாளா இருந்துவிட்டார். வேறென்ன செய்வார்? கோபுரத்துக் குரங்கு, இப்படித்தான் குறும்புச்சேட்டை செய்யும் என்றுதான் குமரி எண்ணிக்கொள்ளமுடியுமே தவிர, அந்த மந்திக்கு மதி புகட்டிடவா முடியும்! பி. டி. இராஜன் யார்? எத்தகைய அருங்குணங்களின் பெட்டகம்! அவருக்குத் தமிழகத்தில் உள்ள தனி மதிப்பு எத்தகையது? அவர் கண்ட அரசியல் வாழ்வுகள் எத்துணை, எத்துணை? அவர் பெற்றுள்ள அரசியல் அனுபவங்கள் எத்தகையன? எவ்வகையான தலைவர்களை, அறிஞர் பெருமக்களை எல்லாம், அவர், உடனிருந்து பணியாற்றுவோராகப் பெற்றிருந்தார் என்ற எதுபற்றியும் எண்ணிப் பார்த்திடாமல், அமைச்சராக அமர்ந்திருக்கும் வாய்ப்பு தனக்குக் கிடைத்துவிட்ட ஒன்றைமட்டுமே கருத்தில் கொண்டுஎடுத்தேன் கவிழ்த்தேன் என்று ஏசிவிட்டார்—அதன்மூலம் தன் 'பிரதாபம்' நிலைநாட்டப்பட்டுவிட்டது என்றும் எண்ணிக்கொண்டிருக்கக்கூடும்! சரியான சூடு கொடுத்தேன்!! போடு போடு என்று போட்டேன் என்றெல்லாம், அவரிடம் சிக்கிவிட்டுள்ள அதிகாரத்தின் சுவையை இரசித்துக் கிடப்போரிடம் கூறிக் குதூகலித்திருக்கக் கூடும். பேன் பார்த்துக்கொண்டே, குரங்குகூடக் கூறியிருக்குமல்லவா, தன் 'ஜதை'யிடம், "இன்று ஒரு பெண், கோயிலுக்குச் சென்றாள், ஆடை அணி அலங்காரத்துடன் — எல்லோரும் அவள் அழகைக் கண்டு புகழ்ந்தார்கள். நான் சும்மா இருப்பேனா? அந்தச் சுந்தரி வெட்கப்படும்படி, 'கேலி' செய்து காட்டினேன். அவமானம் அவளுக்கு! அவசர அவசரமாகக் கோயிலுக்குள்ளே சென்றுவிட்டாள்." என்று கூறியிருக்குமல்லவா!!

கோபுரத்துக் குரங்கு குறும்புச் சேட்டைசெய்யும்போது, குமரிதான் என்ன செய்யமுடியும், அமைச்சர் பீடம் ஏறிக்கொண்ட சுப்ரமணியம் அநாகரீகமாக ஏசும்போது, பி. டி. இராஜன்தான் என்ன செய்யமுடியும்! "இதற்கு எத்தனை கெடுமதி பார்த்தனையா?" என்று மனதுக்குள் கூறிக்கொள்வாள் குமரி! பண்பு இந்த அளவுக்கா கெட்டுப்போகவேண்டும், என்றெண்ணிக் கவலைப்பட்டிருப்பார், பி. டி. இராஜன்.

குறும்புச் சேட்டைகள் செய்யும் கோபுரத்துக் குரங்குக்கு கடைசியில், யார் பாடம் கற்பிப்பார்கள்? குமரியல்ல—கூவிக் குதித்து ஆடிடும் சிறுவர்கள்! நன்மொழி கூறியா? இல்லை, இல்லை! கற்களை வீசுவர், இத்தனை குறும்பா உனக்கு என்று! குரங்கு அந்தப் 'பரிசு' பெற்ற பிறகு, தாவிக்குதித்தோடி தனி இடம் தேடும்—அங்கு 'வேதாந்தி' போல விசாரத்தில் ஆழ்ந்துவிடும். "குந்தி ஓயோ குரங்கே! சந்தடி அடங்க" என்று பழமொழி கூட உண்டல்லவா!!

பி. டி. இராஜன் போன்ற கண்ணியவான்கள், தங்கள் அளவுக்குக் கீழே இறங்கிவந்து இழிமொழி பேசமுடியாது, கடுஞ்சொல்லை வீசவோ கண்டபடி ஏசவோ அவர்கட்கு மனம் வராது, பண்பு எக்காரணம் கொண்டும் கெடலாகாது என்பதால், எவ்வளவு மட்டரகமாகத் தம்மை சுப்ரமணியங்கள் ஏசினாலும், தாம் தமக்குரிய நிலையினின்றும் தூளியும் இறங்கக் கூடாது என்றெண்ணி பொறுத்துக்கொள்வார்கள், என்ற துணிவின் காரணமாகவே அமைச்சர் சுப்ரமணியம் போன்றாருக்கு நாத்துடுக்கு வேகமாகி வருகிறது. கோபுரத்துக் குரங்குக்கு, சிறுவர்கள் கல்வீசி பாடம் கற்பிப்பர்

(18-ம் பக்கம் பார்க்க)

இருவர் உரையாடல்

# நம்ப நேரு!

"என்ன இருந்தாலும் ஓய் நம்ம நேருஜின்னு நேருஜீ தான்! லோகமெல்லாம் புகழ்றது—அவரை—எல்லா தேசத்தாளும் தலைமேலே வச்சுண்டு கூத்தாடுரு. ஆனாலும் அவர் என்ன சொல்ரூர், தெரியுமா?"

"என்ன சொல்ரூர்?"

**"சாதாரண ஜனங்களைப் பார்க்கிறதும் அவாளோடு கொஞ்சறதும் குலாவுறதும்தான் நேக்கு ரொம்பப் பிடிக்குதுன்னு பேசியிருக்கார், ஓய்! இந்த மாசம் 9-ந் தேதி,"**

"அப்படியா?"

"என்ன இப்படி சந்தேகமா கேட்கிறீர்? நம்ம நேருஜியின் பேச்சிலேகூட சந்தேகப்படுவாளோ!"

"பத்திரிகையிலே வர்ற செய்தியைப் படிச்சுட்டுத்தானே, சொல்றீர்..."

"ஆமாம், பேப்பர்காரா, பொய் விஷயத்தைதப் போடுவாளோ...'இந்து'லேகூட பெரிசாப் போட்டிருந்தாள் காணும்..."

"பொய்யின்னு சொல்லலே! அதே பத்திரிகையிலே ஏப் 3-ந் தேதி, பார்லிமெண்டிலே நேரு பேசியதா வந்திருந்ததே பார்த்தீரோ?"

"எதைப்பற்றி"

"அஸ்ஸாம் மாகாணத்தின் எல்லையிலே வாழும் நாகர்கள் தனி நாடு வேண்டும் என்று கேட்கிருர்களே, அதைப்பற்றி..."

"ஆமாம்! அவாள் அப்படிக் கேட்கிறது தப்பு, இந்தியாவிலேயிருந்து யாரும் தனியாப் பிரிஞ்சு போகச் சமமதிக்கமாட்டேன்னு தீர்த்துச் சொல்லிட்டாரே நேருஜீ ......"

"வாயால் சொன்னது மட்டுமா? பீரங்கிகளைக்கொண்டுபோய் வைத்துச் சுட்டுத் தள்ளவும் அல்லவா உத்தரவுபோட்டிருக்கார்......"

"ஆமாம்! அக்கிரமம் செஞ்சா, சுட்டுத் தள்ளாமெ சும்மாயிருப்பாளோ..."

"எதய்யா அக்கிரமம், அவர்கள் தனிநாடு கேட்பதாகச் சொல்றதா ........?"

"பின்னே! அப்படிக் கேட்கலாமோ அவா..."

"கேட்டா, ஒண்ணுயிருப்பதிலேயிருக்கிற லாபத்தை எடுத்து விளக்கிறது. தனிநாடு கேட்கிற பிஜோ என்கிற தலைவன் பக்கம் நாகர்கள் போகாமல் தடுக்கிறது. அதை விட்டுவிட்டு துப்பாக்கியாலும் பீரங்கியாலுமா சுட்டுப் பொசுக்கணும்......"

"என்ன ஓய், பிரமாதப் படுத்துறீர். என்னமோ, சுண்டைக்காய் போல இருக்கிற அவாள் மீது நேருஜிபோய் போர் தொடுத்திருக்கிறது போலன்னு சின்னதைப் பெரிசாக்கிறீர்..."

"சின்ன விஷயமில்லே ஐயா, இது!"

"ஆமாம், மகாப்பெரிய விஷயம்! நேருஜியே சொல்லியிருக்கார் சிறியவிஷயத்தைப் பெரிசுபண்ண வேணும் — நாகர்களில் ரொம்பப் பேர் இந்திய யூனியனிலே இருக்க வேண்டும்னுதான் ஆசைப்படுரு. அவாளோட சேர்ந்திருப் போர் தொகை ஆயிரம் அல்லது 1500 தானிருக்கும என்று..."

"நானும் படித்தேன், இந்த 1500 பேரை அடக்க ஏனய்யா, துப்பாக்கி, பீரங்கி, இராணுவம், அது இதெல்லாம்..."

"சும்மா, மிரட்டறதுக்குத்தான், காந்தியோடெ வாரிசான அவர், மனசு வந்து சுட்டுத் தள்ளுவாரோ ......"

"இதுவரையில் 300 பேருக்கு மேல் சுடப்பட்டு மாண்டார்களாம ஐயா!"

"என்ன...?"

ஆமாம்! இதையும் பார்லிமெண்டில்தான் சொல்லியிருக்கா... இப்படி ஏன் சுட்டுப் பொசுக்கணும். அவர்களைக் கூப்பிட்டு நேரா விவாதிக்கக் கூடாதா என்றெல்லாம் நேருஜியைப் பார்த்து எதிர்க் கட்சிக்காரா கேட்டிருக்கா..." !

"நேருஜி, சரி என்று சொல்லியிருப்பாரே! அவர், என்ன இட்லராமுசோலினியா ஜனங்களோடு பிரதிநிதிகளைப் பார்த்துப் பேசப் பயப்பட......"

"ஆமாமாம்! ஜனங்களைப் பார்க்கிறதும், பேசறதும்தான் தனக்கு மிகவும் பிடித்தமான விஷயம் என்றும் சொல்லியவரேல்லோ!"

"பொதுஜனத் தலைவராச்சே..."

"அந்தப் பொது ஜனத் தலைவர் நாகர்களுடைய தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதுபற்றி என்ன சொன்னுர் தெரியுமோ...நீர் நினைக்கிறதுபோலே, சரிங்கலே...கேள்வி கேட்ட உறுப்பினரை நிமிர்ந்து பார்த்து, **"பிரதம மந்திரியாக இருக்கிறவர் தன்னைக் காண வருகிற ஒவ்வொருத்தரையும் பார்க்கவேண்டும் என்பதில்லை"** என்று கோபத்தோடு சொல்லியிருக்கிருர்"

"உண்மையாகவா?"

"ஆமாய்யா! 3-ந் தேதி, 'இந்து'விலே வந்திருக்கிறது."

"என்னால் நம்ப முடியவில்லையே ......"

"அவரைப்பற்றி நம்ம பேப்பர்காரா போடுற புகழ்ச் சேதிகளை மட்டும் மேலுக்கா பார்க்கிறபோது, பிரமாதமாத்தான் தோணுறது. ஆனா, உள்ளே, அவர் பேச்சு நடவடிக்கை எல்லாத்தையும் கூர்ந்து படிச்சா மனம் என்ன பாடுபடறது தெரியுமா? 300 பேர், செத்து விட்டார்கள்! இன்னும் சுடப்பட்டுக் கொண்டேயிருக்கிருர்கள்! இந்த அக்கிரமத்தை நிறுத்தக்கூடாதா என்று மகஜர் நீட்ட நாகர்கள் சிலர் வருகிருர்கள— அவர்களைப் பார்த்துப் பேசி இந்தப் படுகொலையை நிறுத்த பரபரப்போடு வேலை செய்ய வேண்டிய பண்டிட் ஜி, "ஒரு பிரதம மந்திரியின் வேலை, வருகிற எல்லாரையும் பார்க்க வேண்டும் என்பதல்ல" என்கிருர். எப்படிய்யா இருக்கிறது! எப்பன்னு கேட்கிறேன்!'

"என்னமோ போலிருக்கு ஓய், அப்புறம் சந்திக்கிறேன், உம்மை ..........."

★

# சதித்திட்டம்

—[சி. புலியரசு]—

“இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி உதவியில் நான் ஏமாற்றமடைந்திருக்கிறேன்”

“இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னைக்கு அதிகமான நிதி ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையில் தாமதத்திற்கு இடமின்றி, அதற்கு நியாயமாகக் கிடைக்கவேண்டியவைகளை வற்புறுத்திக்கொண்டே இருக்க வேண்டும். இப்போது தரப்பட்டிருக்கும் தொகையை வைத்துக்கொண்டு திருப்தியடைந்துவிடமுடியாது”

❋

என்று கடந்த சட்டசபைக் கூட்டத்தில் முழக்கமிட்டிருக்கிருர் கோவைச் சீமான் சுப்பிரமணியனுர். இதேபோன்று தென்னகத்து மாநில அமைச்சர்கள் எல்லோருமே வடநாட்டு ஆதிபத்திய வாதிகள் தென்னுட்டிற்கிழைத்துள்ள அநீதிகுறித்துச் சாடியுள்ளனர்.

சீனத்து சோசலிசமும், இரஷ்ய திட்ட முறையும், அமெரிக்க சனநாயகமும் கலந்த கூட்டுச் சரக்கிற்கு சோசலிச மாதிரி பாணி' என்ற போர்வையிட்டு ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரில் நாட்டிலே நடமாட விட்டிருக்கிருர்கள் தென்னுட்டை ‘மார்க்கெட்’டாக்கி கொள்ளையடித்து கொழுக்க நினைக்கும வடநாட்டு வக்கிரபுத்திக்காரரர்கள்.

சரித்திரத்திலே வந்து செல்லும் சர்வாதிகாரிகள் செய்திராத, செய்ய நினையாத துரோகத்தை, அநீதியை தென்னுட்டிற்கிழைத்ததோடன்றி, தெற்கில் தொழில் இல்லை! வேலையில்லை! வாழ வழியில்லை!! என்று முறையிடும் மக்களை நோக்கி ‘ஏக இந்திய’ உபதேசம் செய்கிருர்கள். மிஞ்சினுல் உருட்டுவிழி காட்டி ஊமைகளாக்கிவிட நினைக்கிருர்கள்.

இரண்டாவதுஐந்தாண்டுத்திட்டத்திற்கென இந்திய உபகண்டத்தின் ஆட்சியாளர்கள் ரூ 4800-கோடி ஒதுக்கியுள்ளனர். இதில் ரூ. 2300 கோடி தனியார்துறைக்கும் ரூ. 286 கோடி மத்திய ஆட்சித்துறைக்கும் போக எஞ்சிய ரூ. 2214-கோடித் தொகையை பொதுத்துறை என்ற பெயரில் மாநிலங்களுக்கும் ஒதுக்கியுள்ளார்கள்.

சனநாயக முறையில் மக்கட் தொகை, தொழில் முன்னேற்றம், வாழ்க்கை நிலை ஆகியவற்றின் அடிப்படையில்தான் பல்வேறு மாநிலங்களுக்கும் நிதி ஒதுக்கப்படும் என்று திட்ட நகல் வெளியிடுமுன் கூறினுர்கள்.

சொல்லொன்றும், செயலொன்றுமாகவே காரிய மாற்றிப் பழகிவிட்ட காங்கிரசு ஆளவந்தாரிடமிருந்து நாம் ஒன்றும் கண்ணியத்தை, நேர்மையை எதிர்பார்த்ததில்லை. அக்கருத்தை பலப்படுத்தும் வகையிலேயே வெளியிடப்பட்ட திட்டமும் அமைந்திருந்தது.

வடநாடு தென்னுட்டைச் சுரண்டிச் செல்கிறது, ஆதிக்கம் செலுத்துகிறது, அநீதியிழைக்கிறது என்று நாம் கூறியபோது நம்மைத் துரோகிகள், பிரிவினை உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டி நாட்டைத் துண்டாட நினைக்கும் துன்மார்க்கர்கள் என்றெல்லாம் தூற்றித் திரிந்தவர்கள் கூட இன்று கூன் நிமிர்ந்து குரலெழுப்புகிருர்கள், வடநாடு தென்னுட்டை வஞ்சிக்கிறது! வாழவிட மறுக்கிறது என்று.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் வடக்கு வண்ணமாளிகையாகவும், தெற்கு தேய்ந்த குடிசைக் காடாகவும் மாறி வந்திருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இந்நிலையை மீண்டும் சீர்கேடடையச் செய்கிறதேயன்றி சீர்செய்யப்பயன்படவில்லை.

இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் வாழும் வசதிபெற்ற வடநாடு மீண்டும் வளம்பெற ஒதுக்கப்பட்டுள்ள தொகை மாநில வாரியாக:-

| மாநிலம் | ஒதுக்கப்பட்டுள்ள தொகை | |
|---|---|---|
| அசாம் | 56·4 | கோடி |
| பீகார் | 192·9 | ” |
| பம்பாய் | 264·4 | ” |
| மத்திய பிரதேசம் | 123·3 | ” |
| ஒரிசா | 97·3 | ” |
| பஞ்சாப் | 126·2 | ” |
| உத்தரப் பிரதேசம் | 248·6 | ” |
| மேற்கு வங்கம் | 152·5 | ” |
| ‘பி’ பிரிவு மாநிலங்கள் | 380·1 | ” |
| ‘சி’ பிரிவு மாநிலங்கள் | 101·5 | ” |
| அந்தமான் நிக்கோபர் | 5·0 | ” |
| வ. கி. எ. ஏஜன்சி | 9·5 | ” |
| தாமோதர் திட்டம் | 12·2 | ” |
| மொத்தம் | 1769·9 | |

தேய்ந்து வரும் தென்னுடு மீண்டும் தேய்ந்தொழியஒதுக்கப்பட்டுள்ள தொகை மாநில வாரியாக:-

| | | |
|---|---|---|
| சென்னை | 170·3 | கோடி |
| ஆந்திரா | 116·3 | ” |
| மைசூர் | 78·0 | ” |
| திரு, கொச்சி | 71·2 | ” |
| குடகு | 3·7 | ” |
| பாண்டிச்சேரி | 5·7 | ” |
| மொத்தம் | 444·1 | |

மக்கட் தொகையைக் கணக்கிட்டே திட்ட நிதி ஒதுக்கல் நடைபெற்றதாகக் கூறுகிருர்கள். அவ்வாருயின் இந்திய உபகண்டத்தின் மொத்த மக்கட் தொகையான முப்பத்து ஐந்தரைக் கோடியில் (1951 சென்ஸஸ் 356829485) நான்கில் ஒரு பகுதியான எட்டேமுக்கால் கோடி (195 1 சென்ஸஸ் 87318720) மக்கள் தென்னுட்டவர் ஆயிற்றே. மொத்தம் ஒதுக்கப்பட்ட தொகை ரூ 2214 கோடியில் கால் பகுதியான 553 5 கோடியல்லவா தென்னுட்டிற்கு நியாயமாக ஒதுக்கியிருக்கவேண்டும். அவ்வாறின்றி ரூ 112·4 கோடியைக் குறைத்து! ரூ 444. 1 கோடி மட்டும் ஒதுக்கியது எவ்வகையில் நீதியாகும்.

ஆண்டொன்றுக்குப் பல கோடி ரூபாய்கள் வருவாய் தரும் 40 இரும்புத் தொழிற்சாலைகளும் 80 கண்ணுடித் தொழிற்சாலைகளும், 150 எண்ணெய்த்தொழிற்சாலைகளும் 25பெரிய சோப்புத் தொழிற்சாலைகளும், பல குறிப்பிடத்தக்க வனஸ்பதி தொழிலகங்களும், 15,0000 காலன்கள் உற்பத்தி செய்யக்கூடிய 6 மாபெரும் ‘பெயிண்டு—வார்ணீஷ்’ தொழிற்சாலைகளும், 4500000 காலன்கள் உற்பத்தி செய்யும் கொதி எண்ணெய் (Boiled oil) தொழிற்சாலைகளும் பெற்று ஓங்கி வளர்ந்துள்ள உத்தர பிரதேசத்துக்கு ரூ 248 கோடி.

இந்தியாவின் தலைசிறந்த உர உற்பத்திச்சாலையாம் சிந்திரியையும் மற்றும் 3270 மிகப்பெரிய தொழிற்சாலைகளையும் பெற்றுப் பல இலட்சக் கணக்கான மக்களுக்கு வாழவசதியை

யும் பெற்றுத் தந்துள்ள பீகார் மீண்டும் வளர ரூ. 192·9 கோடி.

அணுசக்தி உற்பத்தியிலிருந்து அலுமினியம் உற்பத்தி வரை செய்யும் 10 இலட்சத்திற்கு மேல் மக்களுக்கு வேலை தரும் 6835 பெருந்தொழிற்சாலைகளைக்கொண்டு இந்தியாவின் 'லங்காஷயர்' எனக் கூறுமளவுக்கு ஏற்றமுள்ள பம்பாய் மீண்டும் எழில்பெற ரூ. 264·4 கோடி.

அதேபோது தொழிலற்று, பொருளற்று, நலிவுற்று விழிகளில் நீரோடு வீதிகளில் 'வேலையோ வேலை கூலியோ கூலி' என்று வலம் வருகிருனே வற்றிய வயிற்றேடு சென்னை மாநிலத்தான்! அவன் வாழ, அவன் மாநிலம் வாழ வடநாட்டுத் தர்ம தாதாக்களால், ஒதுக்கப்பட்ட தொகையோ ரூ. 170·3 கோடி.

எது நீதி! எங்கே நியாயம்!

தொழில் வளமின்றி வறுமை நெளியும் தென்னுட்டில் பெரும் கனரகத் தொழிற்சாலைகள் நிறுவவேண்டும். அதற்குத்தேவைப்படும்கனிப்பொருள் இந்நாட்டில் ஏராளம் என்று அன்னியர்கள் இந்நாட்டை ஆண்ட அந்நாளிலிருந்து 'நம்மவர்கள்' ஆளவந்த இந்நாள்வரை கோரிவந்துள்ளோம். என்றுலும் நம் கோரிக்கைக்குச் செவிசாய்க்க எண்ணவில்லை டில்லி சீமான்கள்.

தென்னவர் பயிர்த்தொழிலையே நம்பி வாழ்ந்து,வடநாட்டார் வட்டிலி விடுவதைத் தின்று குட்டக்குட்ட குனிந்துகிடக்கும் கோழைகளாய், குற்றேவல் புரியும் அடிமைகளாய் என்றென்றும் இருத்தல்வேண்டும் என்ற கொள்கை செயலளவிலே நிறைவேற்றப்பட்டு வருகிறது.

தென்னகம் தொழில் மயமாக வாய்ப்பும், வசதியும் இல்லை என்று கூறி வாயடைக்க எண்ணுகிருர்கள். இன்னுட்டில் என்ன இல்லை தொழில் நடத்த? 1950-ம் ஆண்டில் சர்க்கார் செய்தி விளம்பர இலாகா வெளியிட்டுள்ளது புள்ளி விபரப் பட்டியல். அதில் காணப்படும் சென்னை, ஆந்திரப் பகுதிகளில் மட்டும் கிட்டும் கனிப்பொருள்களின் பட்டியல் காண்க:—

| கனிப்பொருள் | கிடைக்கும் இடம் | கிடைக்கக் கூடிய அளவு |
|---|---|---|
| இரும்பு 1. | சேலம் திருச்சி | 394600000 டன் |
| 2. | கர்னூல் | 3700000 ,, |
| 3. | சாந்தூர் | 130000000 ,, |
| 4. | மைசூர் | 15000000 ,, |
| மேக்னசைட். | சேலம் | 8,30,00000 ,, |
| நிலக்கரி-(பழுப்பு) | நெய்வேலி | 200,0000000 ,, |
| ஜிப்சம் | திருச்சி | 15000000 டன் |
| பாஸ்பேட்(கலவை) | ,, | 2000000 ,, |
| பாக்சைட் | சேலம் | 6500000 ,, |
| குரோமைட் | சேலம் (சித்தம் பூண்டி) | 100000 ,, |

இது மட்டுமன்றி சென்னை சர்க்கார் 1947-ம் ஆண்டில் அமைத்த பார்த்தசாரதி, குமாரசாமிராஜா, சஞ்சீவி ரெட்டிக் கமிட்டி சென்னை ஆந்திரப் பகுதிகளில் கிடைக்கும் கனிச் செல்வங்களை மாவட்ட வாரியாக வெளியிட்டுள்ளது. அதைக் காணுங்கால் தென்னகம் எத்தனை வகை கனிப்பொருள்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதென்பது தெள்ளிதில் விளங்கும்.

அனந்தபூரில்

பாரைட்ஸ், கால்சைட், கோரன்டம், வைரம், எஃகு, தங்கம், மஞ்சள் களிவகை, படிகக்கற்கள், ஸ்டேடைட், அஸ்பெஸ்டாஸ், குரோமைட்.

வடாற்காட்டில்

இரும்பு, லைம்ஸ்டோன்,பைரைட்ஸ், கார்னெட், ஸ்டேடைட், செங்களி வகைகள்.

தென்னுற்காடு

இரும்பு, பழுப்பு நிலக்கரி, சீன, சிவப்பு, மஞ்சள் களிவகை.

பெல்லாரியில்

செம்பு, வைரம், தங்கம், இரும்பு, எஃகு, மேக்னசைட், மேங்கனீஸ், ஆக்ஸைடு, பைரோலுசைட், எமெரியுப்பு, களிவகை.

கோவையில்

தங்கம், இரும்பு, செம்பு, மைக்கா, அஸ்பெஸ்டாஸ், கோரன்டம், கியானைட் லைம்ஸ்டோன், மேங்கனீஸ், ஸ்டேடைட், சீர்கோன்.

கடப்பையில்

அலுமினியம், வெள்ளி, ஜிப்சம், சிலிகேட், ஆன்டிமோனி, அஸ்பெஸ்டாஸ், பாரைட்ஸ், வைரம், செம்பு, கலினு எஃகு, இரும்பு, லைம்ஸ்டோன், துத்தநாகம், சிலேட்டுக்கல், செவ்வாக்ஸைடு.

கிழக்கு கோதாவரியில்

நிலக்கரி. வைரம், காரீயம், படிகக்கற்கள், எரிவாயுப் பொருள்.

மேற்கு கோதாவரியில்

இரும்பு, மைக்கா, பைரோலுடைட், பழுப்பு நிலக்கரி, இல்மனைட், காரீயம் களிவகை.

குண்டூரில்

வைரம், இரும்பு, எஃகு, செம்பு, ஸ்டேடைட், பிளோஸ்பர், பாரைட்ஸ், லைம்ஸ்டோன்.

திருச்சியில்

செம்பு, ஜிப்சம், அபாடைட், சிலிஸ்டைட், செரிட்ஸ், கோரன்டம், பிளின்ட்ஸ், இரும்பு, மேக்னசைட், பாஸ்பேட்ஸ் கார்னைட், குவார்ட்சைட், ஸ்டிரோன்டியம், டென்டாலம், டங்ஸ்டன், சிர்கோன், சாக், சார்னேகைட், கொலம்பைட், பெல்ஸ்பர், கால்சியம்காஞ்போனேட்' ஸ்டேடைட் லைம்ஸ்டோன், களிவகை.

தஞ்சையில்

பழுப்பு நிலக்கரி, மோனசைட், படிகக்கற்கள், கார்னெட், கருங்களி, இல்மனைட்' சிர்கோன், மேக்னடைட், ரூடைல்.

சேலத்தில்

தங்கம், இரும்பு, பாக்சைட், மேக்னசைட், மேக்னடைட், குரோமைட், பெரிட்டாஷ், மைக்கா, அஸ்பெஸ்டாஸ், பெல்ஸ்பர், வெள்ளி, சார்னேகைட், பாரைட்ஸ், ஸ்டேடைட், பெரில் கோரன்டம், லைம்ஸ்டோன், பளிங்கு கற்கள்.

மற்றும் விசாகை, நெல்லை, நெல்லூர்,இராமனுதபுரம்,நீலகிரி, மலபார், மதுரை, கர்னூல், கிருஷ்ணு, சித்தூர், தென் கன்னடம் போன்ற மாவட்டங்களில் கிடைக்கும் கனிப்பொருள்களும், அவை எந்தெந்த முறைகளில் பயன்படுத்தப்பட்டு தென்னுட்டில் பெரும் கனரகத் தொழில்களை நிறுவ முடியும் என்பதையும் அக்கமிட்டி புள்ளிவிபரங்களோடு 1948-ம் ஆண்டில் சர்க்காருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

இத்தனை பொருள்கள் கிடைக்க வாய்ப்பிருந்தும் கூட கனரகத் தொழில் நிறுவப்படாமைக்கு மற்றோர் காரணம் காட்டித் தட்டிக்கழிக்க முற்படுகிருர்கள். தென்னுட்டில் கிடைக்கும் கனிப் பொருள்களைக் கொண்டு கனரகத் தொழிலமைக்கத் தேவையான மின்சக்தி குறைந்த செலவில் கிடைப்பதில்லையாம். ஆகவேதான் தென்னுட்டில் கிடைக்கும் உலோகப் பொருள்களை உபயோகப்படுத்த முடியவில்லை என்று சத்தற்ற சொத்தை வாதம் புரிகிருர்கள்.

தென்னுட்டில் மின்சக்தி உற்பத்திக் குறைவு; குறைந்த செலவில் கிடைப்பதில்லை என்பதை வாதத்திற்கு ஒப்புக்கொண்டாலும், அந்நிலை நிலவக் காரணம் யார்?

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்சக்தியைப் பெருக்க தீட்டிய தென்னவர்தம் திட்டத்தை வெட்டிச் சிதைத்து வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சியவர்கள் வடநாட்டு வன்கணாளர்கள்தானே?

முதல் ஐந்தாண்டு திட்டத்தில் பாசன, மின்சக்தி உற்பத்திக்கென்று ஒதுக்கப்பட்டமொத்தத்தொகையான ரூ 555. 63 கோடியில் தென்னாட்டிற்கென்று ரூ 119.54 கோடி மட்டும் தானே ஒதுக்கப்பட்டது. மின்சக்தி உற்பத்திக் குறைவான தென் மாநிலங்களுக்கு அதிகம் அள்ளிக் கொடுக்காவிட்டாலும், அவர்கள் கூறும் மக்கட் தொகை, தொழில் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் நோக்கினும் நியாயப்படி ரூ 138. 90¾ கோடியல்லவா ஒதுக்கி இருக்க வேண்டும்.

முதல் ஐந்தாண்டு திட்டத்தில் நிதி யில்லை, ஆகவே மின்விசை உற்பத்திக்குச் செலவுசெய்ய வழியில்லை என்றனர்.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மின்சக்தி தேவையான அளவு கிடைக்கவில்லை, ஆகவே தென்னாட்டில் கனரகத்தொழில் செய்யத் திட்டமில்லை என்கின்றனர்.

இவர்கள் கூறும் கூற்றுக்கு மறுப்புரைக்கும் வகையிலே அமைகின்றது 1948-ம் ஆண்டில் சென்னை சர்க்கார் ஆலோசகப்பொறியியற்கலை வல்லுனர் தரும் புள்ளிவிவரங்கள்.

தென்னாட்டு மாநிலங்களில் சென்னையைத் தவிர மற்ற மாநிலங்கள் யாவும் மின்சக்தியை அவைகளின் தேவைக்கு அதிகமான அளவிலேயே தாயாரிக்கின்றன.

திரு. கொச்சி 6,50,000 கிலோ வாட்களும், குடகு 40,000 கிலோ வாட்களும் உற்பத்தி செய்கின்றன. தி. கொச்சிக்கு தேவைப்படும் மொத்த மின்விசையே 380,000 கிலோ வாட்கள்தான். குடகு தயாரிக்கும் நாற்பதினாயிரம் கிலோ வாட்களில் அதன் தேவை 30,000 கி. வாட்கள்தான். ஆகவே, இவ்விரண்டு மாநிலங்களிலும் மிகுதிப்படும் 2,57,000 கிலோ வாட்களை நீண்டகால ஒப்பந்தத்தின் மூலம் சென்னை பெறமுடியும்.

அடுத்து, தற்போது ஆந்திரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுங்கபத்திரா, மெக்குண்ட் நீர் விசைத் திட்டங்கள் மூலம் உண்டாக்கப்படும் 1,80.000 கிலோ வாட்கள் மின்சக்தி எதிர்காலத்தில் ஆந்திரத்தின் தேவைக்குப் போதுமானதாய் இருக்கும். ஆகவே, இதுவரை ஆந்திரம், மைசூர் 'ஜோக்' மின்விசை நிலையத்திலிருந்து கடனைப் பெற்றுவந்த மின்விசையை இனிப் பெறவேண்டிய அவசியம் ஆந்திரத்திற்கு ஏற்படாதாகையாலும், அதேபோது மைசூர் மின்விசையில் சுயதேவைப் பூர்த்தியோடுள்ளமையால் 'ஜோக்' திட்டத்தில் மிச்சப்படும் மின்விசையை குறைந்த நஷ்டஈட்டின் மூலம் சென்னை பெறமுடியும்.

இவ்வாறு கிடைக்கும் மின்விசையைக் கொண்டு சேலத்தில் கஞ்சமலை, கொடுமலை, பெருமாமலை, புதுப்பாளையம், ஆத்தூர், சிங்கியன், கொம்பை, சித்தேரி, தாய்னுதமலை, தீர்த்தமலை, இராசீபுரம், நாமக்கல், கொல்லிமலை, பச்சைமலை ஆகிய இடங்களில் கிடைக்கும் இரும்புத் தாதுக்களைப் பயன்படுத்தி மாபெரும் உருக்குத் தொழிற்சாலை நிறுவ வாய்ப்புள்ளது. அதன் மூலம், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வாழ வழி கிடைக்கும்.

மேலும் சென்னை மாநிலத்திலே திருச்சி மாவட்டத்தில் பீகாரில் அமைந்துள்ளதைப்போன்ற (சிந்திரி) மிகப் பெரிய உர உற்பத்திச் சாலையை நிறுவமுடியும். அதற்குத் தேவையான ஜிப்சம் என்னும் சிலா சத்து இரும்புச் சத்து கலந்த பாஸ்பேட் ஆகியவை அங்கே ஏராளமாகக் கிடைக்கின்றது. மற்றும் அதற்குத் தேவைப்படுவது (Fuel) விறகு அல்லது (Coke) சுட்ட கரியாகும். சிந்திரியில் அமைக்கப்பட்டுள்ளதைப் போன்ற 'கோக் ஒவன்' அமைத்து, தென்னார்க்காடு, வடார்க்காடு, சேலம் திருச்சி மாவட்டங்களில் 21,35,539 ஏக்கராக்கள் பரவிக் கிடக்கும் காடுகளிலிருந்து கிடைக்கும் விறகைக் கரியாக்கி, அமோனியம் சல்பேட், யூரியா போன்ற உயர்ந்தரக உரம் உற்பத்தி செய்ய இயலும். போக்கு வரத்து வசதிகளைப் பெற்ற திருச்சி, இத் தொழிலமைக்க எல்லா வகையாலும் சிறந்த இடமாகும்.

தவிர சேலத்தில், பூகர்ப்ப ஆராய்ச்சி வல்லுனர் டாக்டர் எம். எஸ். கிருஷ்ணன் அவர்களின் ஆராய்ச்சி முடிவுப்படி சேர்வராயன் மலைத்தொடரில் உலகில் வேறெங்கும் கிட்டாத முதல்தர பாக்சைட் இரண்டரை மில்லியன் டன்கள் புதைந்து கிடக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி மாபெரும் அலுமினிய உற்பத்திச்சாலையமைத்து அலுமினியத் தூள், அலுமினிய 'கேபிள்கள்' அலுமினியத் தகடுகள்: ஆகாய விமானங்களுக்கு பூசப்படும் அலுமினியப் பசைபோன்ற பொருள்கள் உற்பத்தி செய்ய முடியும். சமார் அரை மில்லியன் டன்கள் பாக்சைட் மட்டுமே பெற்றுள்ள கனடா இன்று உலக மார்க்கட்டில் மலிவான அலுபனியப் பொருள்களை விற்று டாலர் குவிக்கும் போது, அதைவிட ஐந்துமடங்கு அதிமான பாக்சைட்டைப் பெற்றுள்ள சேலம் திராவிடத்தின் புதையலாகும். அத்தொழிலுக்குத் தேவைப்படும் மின்விசையை மலிவான செலவில் 'ஜோக்' 'மோயார்' நீர்மின் விசை நிலையங்களிலிருந்து பெறலாம். அதன் மூலம் தென்னாட்டின், குறிப்பாக தமிழகத்தின் வேலையின்மைப் பளு பாதியளவு குறையும் என்றால் மிகையாது.

மற்றும் உலகிலேயே மிகச் சிறந்த அணைக்கட்டு என்று போற்றப்படும் மேட்டூர் அணையில் உற்பத்தியாகும் மின் விசையைப் பயன்படுத்தி திராவிடத்தின் தேவைக்கதிகமான பேப்பர், பேப்பர்-போர்டு, ஸ்டிரா-போர்டு, நியூஸ் பிரிண்ட், எழுதும் காகிதம் போன்ற பொருள்களை உற்பத்தி செய்யும் மிகப் பெரிய காகிதத் தொழிற்சாலை நிறுவ வாய்ப்புள்ளது. இத்தொழிலுக்குத் தேவையான மூங்கில் மேட்டூருக்கு நாற்பதே மைல் தொலைவில் உள்ள ராமாபுரம் காடுகளில் நாற்பதினாயிரம் ஏக்கராக்கள் பரவிக்கிடக்கின்றன. மேட்டூருக்கு 10 மைல் தொலைவில் உள்ள பல்ல மலைக் குன்றுகளில் மட்டும் கிட்டத்தட்ட 3000 ஏக்கராக்கள் மூங்கிற் காடுகள் உள்ளன. இவையன்றி பார்கூர், பவானி மலைத்தொடரிலும் பத்திரிகைத் தொழிலுக்குத் தேவையான நியூஸ்பிரிண்ட் காகிதம் செய்யப் பயன்படும் நேர்த்தியான சோற்று மூங்கிற் காடுகள் உள்ளன. 1932-ம் ஆண்டில் ரெயிட் (Mr Raitt) எல். பி. கிரீன்ஸ் போன்ற வெள்ளையர்கள் மேட்டூரில் காகிதத் தொழிற்சாலை அமைப்பைப்பற்றி தந்திருக்கும் தகவல் திராவிடத்து மக்கட்கு தித்திக்கும் செய்தியாகும்! மேட்டூரில் காகிதத் தொழிற்சாலை அமைத்து நல்ல முறையில் நடத்தப்படுமானால் தென்னாட்டுப்பேப்பர் தேவை பூர்த்தியாவதோடு உலக மார்க்கெட்டில் 'ஆஸ்திரியன்' 'நார்வீஜியன்' 'கனடியன்' பேப்பர்களோடு போட்டியிடவும் முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவை மட்டுமின்றி சர்க்கரை ஆலைகள், செமன்டு ஆலைகள், சல்பேரிக் திராவகம், இரசாயனப் பொருள்கள், கனரசாயனப் பொருள்கள் 'இன்ஸிலேட்டர்'கள் பீங்கான் பொருள்கள், செப்பு மின்சாரக் கருவிகள், புகை வண்டிக்குத் தேவையான சிறிய பாகங்கள், அஸ்பெஸ்டாஸ் பொருள்கள், 'மேக்னஜம்' எனப்படும் வெண் உலேகப்பொருள் ஆகிய தொழில்கள் செய்யும மாபெரும் தொழிற்சாலைகள் மாவட்டத்திற்கொன்று நிறுவும் வாய்ப்பும், வசதியும் இருந்தும் தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது. இந்நாட்டில் கிட்டும் யுரேனியமும், தோரியமும் வடக்கே அணுஉலைகளாகிக் கொண்டுள்ளன. வடக்கு வளரவும் தெற்குத்தேயவும் இரண்டாவதுசதித் திட்டம் தீட்டப்பட்டுவிட்டது. எல்லா வளமும் பெற்று இழிநிலையிலுழலுகின்ற எந்தாய்த்திருநாடே நீ எழில் பெறுவதெந்நாளோ.

★

# போய்விட்டாள்?

இரவு நேரம். மாளிகையின் மணி மாடத்திலே கணவனும் மனைவியும் அமர்ந்திருந்தனர். வானத்து வெண்ணிலாவும், வையத்துக் காட்சிகளும், வந்தடிக்கும் தென்றலும் அவர்களை எங்கோ இழுத்துச் சென்றுகொண்டிருந்தன. கணவன் சொன்னான்,

"கண்ணே! ஏதாவது பேசேன்...',

எதைப்பற்றிப் பேசுவது? ஏழையாக இருந்தால், 'நாளைக்கு அரிசி இல்லை—அடுத்த வீட்டு அக்காவிடம் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பது எப்போது—கிழிந்த புடவைக்குப் பதில் மாற்றுப் புடவை வாங்கிக் கொடுக்கமாட்டீர்களா?'—இப்படி எத்தனையோ இருக்கும் பேச. இவர்களுக்கு அப்படிப்பட்ட கவலைகள் எதுவும் எழ நியாயமில்லை. ஏனெனில், அவன் ஒரு பெரிய அதிகாரி. ஆகவே எதைப்பற்றிப் பேசுவது அவள். கொஞ்சநேரம் யோசித்தாள்...ஊரில் ஆடும் சினிமா, கலையில் படித்த கதை, ஆகியவைகளைப்பற்றியெல்லாம் பேசியாயிற்று. இனிமேல், எதைப்பற்றிப் பேசுவது?

வேலைக்காரி அஞ்சுகத்தின் நினைவு வந்தது அவளுக்கு. ஆகா, எவ்வளவு ரசமான விஷயம் அகப்பட்டுவிட்டது பேச!

"இந்த அக்கிரமத்தைக் கேட்டீர்களா......?" என்று ஆரம்பித்தாள் அவள்.

"எந்த அக்கிரமத்தை?"

"வேலைக்காரி அஞ்சுகம் கலியாணம் செய்துகொண்ட அக்கிரமத்தைத் தான்!"

"இதிலென்ன அக்கிரமம் இருக்கிறது...?"

"பிறகென்ன? யாரைக் கலியாணம் செய்துகொண்டாள் தெரியுமோ? ஒரு அயோக்கியனை!"

"அவன் அயோக்கியன் என்பதை எப்படி நீ கண்டாய்...?"

"ஊரெல்லாம் பேசுகிறதே-உத்தண்டன் என்றால் ரௌடி, காலிப்பயல், திருடன் என்று எல்லோருக்கும் தெரியுமே..."

"அப்படி என்ன குற்றம் செய்தானும் அவன்...?"

"என்ன குற்றமா? அவன் செய்யாத குற்றமே கிடையாதாம். ஒரு குழந்தையின் கழுத்திலிருந்த சங்கிலியைத் திருடினானும்—ஓடுகிற பஸ்ஸில் ஒருவரிடமிருந்த பர்சை அடித்தானும்......அவனோடு இவள் எப்படிப் போய் வாழப்போகிறாள்? என்ன சுகத்தைக் காணமுடியும் அவனிடம்? அப்பப்பா! அவனைப்போல நானிருந்தால், என் தலை போனாலும் சரி, அவனைக் கலியாணம் செய்துகொள்ளமாட்டேன்..."

"அவன் ஒரு இலட்சாதிப் பிரபுவாக இருந்தால்...?"

"கோடீசுவரனாகத்தானிருக்கட்டுமே! ஒருபோதும் இப்படிப்பட்ட அயோக்கியனைக் கலியாணம் செய்துகொள்ளவேமாட்டேன்..."

"அஞ்சுகத்தின் புருஷனிடம் இருக்கிற குணங்கள் என்னிடமும் இருந்தால்...?"

"என் கண்ணாளனை உங்களிடமும் அப்படிப்பட்ட குணங்களா? செச்சே! கனவில்கூட நினைக்கமாட்டேன், நான்"

"இருந்தால்...?"

'இருந்தால்......? கொஞ்சங்கூட உங்களோடு வாழச் சம்மதிக்கமாட்டேன்; உடனே போய்விடுவேன்"

"உண்மையாகவா?"

,'நிச்சயமாக!"

---

ரஷ்யக் கதாசிரியரான ஆன்டன் செகாவ் தீட்டிய சிறுகதையொன்றின், தழுவல்.

—அண்ணல்.

---

தனக்குள் சிரித்துக்கொண்டான் அவன். அஞ்சுகத்தின் புருஷனை, அவள் அவ்வளவு அலட்சியமாகப் பேசியது என்னமோபோலிருந்தது அவனுக்கு. ஏழை எளியதுகள் என்றால் இவ்வளவு அலட்சியமாகப் பேசும் அவளை நினைத்தபோது அவனுக்கு என்னமோபோலிருந்தது. மீண்டும் ஒருமுறை அவளை நோக்கினான்...

"கமலா! என்னுடைய மாதச் சம்பளம் என்ன...?"

"ஏன்?!"

"சொல்லேன், என்னுடைய மாதச் சம்பளம் என்ன?"

"முன்னூறு ரூபாய்"

"போன மாதம் உனக்கு வாங்கி வந்தேனே வைர நெக்லேஸ், அதன் விலை என்ன?"

"இரண்டாயிரம் ரூபாய் என்றீர்கள்"

"நேற்று உனக்கு வாங்கி வந்த பட்டுப் புடவையின் விலை?"

"நூற்று ஐம்பது"

"மாதாமாதம் டாக்டருக்கு நாம் கொடுக்கிற பில்...?"

"சராசரி நூறு ரூபாய் வரும்"

"இந்தப் பங்களாவுக்குக் கொடுக்கும் வாடகை...?"

"நூற்றிருபது"

"கார் டிரைவர் சம்பளம்?"

"அறுபது"

"ஆக மொத்தம் இவ்வளவுக்கும் பணம்...?"

"அதுதான் நீங்கள் சம்பாதிக்கிறீர்களே!"

"எவ்வளவு சம்பாதிக்கிறேன்? மாதம் 300 ரூபாய். ஆனால், மாதா மாதம் 500 ரூபாய் வரையில் செலவு செய்யமுடிகிறது நம்மால்...அதோடு ஆயிரம் இரண்டாயிரத்தில் உனக்கு நகைகளும் வாங்கிப் பூட்டமுடிகிறது என்றால்...ஆனால், நான் வாங்குகிற சம்பளமோ மாதம் ரூபாய் முன்னூறு! எப்படி முடிகிறது இவ்வளவும்?"

அவள் திகைத்தாள். எப்படி முடிகிறது இவ்வளவும்......அவளுக்கு எதுவும் புரியவில்லை.

"எப்படி முடிகிறது கமலா? அஞ்சுகத்தின் புருஷன் வயிற்றுக்கில்லாததால் திருடுகிறான்—சேப்படி அடிக்கிறான். ஆனால், வாழக்கூடிய அளவுக்கு வருமானம் இருந்தும் நான் இலஞ்சம் வாங்குகிறேன். உன் வைரநெக்லேஸ் ஒரு வியாபாரியைக் கொலைக் குற்றத்தில் அகப்படாமல் செய்ததற்காக நான் பெற்ற பரிசு! தெரியுமா? மாதா மாதம் உனக்கும் எனக்கும் ஏற்படுகிற செலவுகளுக்கு எங்கிருந்து பணம் வருகிறது என்பதைத் தெரிந்துகொண்டாயா...? உன் கணவன் பெரிய அதிகாரியாக இருப்பதால், எப்படியெல்லாமோ சம்பாதிக்க முடிகிறது. நம் செலவுகளைச் சரிக்கட்ட நானும்தான் திருட்டு வழிகளில் செல்லுகிறேன்....அவனாவது வயிற்றுக்காகத் திருடுகிறான். நானோ ஆடம்பரத்துக்காக இப்படி அக்கிரமமான வழிகளில் பணம் சம்பாதிக்கிறேன்......இருவரில் யார் பெரிய அயோக்கியர்கள்? யார் பக்காத் திருடர்கள்?"

கமலா, பதில் சொல்லவில்லை. எழுந்தாள். அவனைவிட்டுப் புறப்பட்டாள். எங்கேயென்று கேட்கிறீர்களா? வீட்டைவிட்டு அல்ல! அந்த அறையைவிட்டு பக்கத்து அறைக்குத்தான்!!

★

# நல்ல தீர்ப்பு

**தம்பி!**

“விநாயகர் கோயிலைக் கட்டியவரே இவருடைய பாட்டனார்!

கோயிலுக்கு மானியமாக தென்னந் தோப்பு எழுதிவைத்து, உற்சவாதிகளைச் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்தவர், இவருடைய தகப்பனார். இவர், கோயிலுக்குத் தர்மகர்த்தாவாகி கலனைகிக்கிடந்த திருக்குளத்தைச் செப்பனிட்டார், கோயில் தோட்டத்தில் மா, பலா, வாழை ஆகிய மரம் வைத்து அழகும் பயனும் வரக்கூடியவிதமாக்கினார்.

ஊரிலே இவருக்கு நல்ல பெயர். யாரிடம் விசாரித்தாலும், இவர் நற்குணவான் என்பதையும், கூறுவார்கள் —தர்மகர்த்தாவாக இருக்க சகல விதமான பொறுத்தமும் உடையவர் என்பதையும் கூறுவார்கள்—இவருடைய குடும்பத்துக்கே, தர்மகர்த்தாவாக இருக்கும் ‘பாத்யதை’ உண்டு என்பதையும் எடுத்துரைப்பார்கள்”—ஆதாரங்களை வழக்கறிஞர், ஆணித்திறமாக எடுத்துக்காட்டினார்.

அறம் வளர்த்தான் பிள்ளைதான், அந்த ஊர் விநாயகர் கோயிலுக்குத் தர்மகர்த்தாவாக இருக்க வேண்டும் என்பதற்கு, வழக்கறிஞர் எடுத்துக் காட்டிய ஆதாரங்களையும், ஆதாரங்களை எடுத்துக் காட்டிய திறத்தையும், பலரும் பாராட்டினர். நிச்சயமாக அறம் வளர்த்தான் பிள்ளைதான், கோயில் தர்மகர்த்தாவாக நியமிக்கப்படுவார், என்று கூறினர். ஆனால், வழக்கு மன்றத் தலைவரோ விநாயகர் கோயிலுக்கு வீராசாமி நாயகர்தான், தர்மகர்த்தாவாக இருக்கவேண்டும் என்று தீர்ப்பளித்தார்.

அனைவரும் திடுக்கிட்டுப் போயினர்! அப்பழுக்கற்ற ஆதாரம் காட்டினார் வழக்கறிஞர், சாட்சிகள் யாவரும் ஒழுங்காக உண்மையை எடுத்துரைத்தனர், என்ன அக்ரமம், எதிர்பார்த்ததற்கு நேர் மாறாகத் தீர்ப்பளித்தாரே! வீராசாமி நாயகர் தர்மகர்த்தாவாமே! அவரேகூட, இந்தத் தீர்ப்பை எதிர்பார்த்திருக்க மாட்டாரே, அவர் வழக்கு தொடுத்ததன் காரணமே, அறம் வளர்த்தான் பிள்ளைக்குத் தொல்லை தரவேண்டும் என்பதற்கே தவிர, தர்மகர்த்தா ஆகவேண்டும் என்பதற்கு அல்லவே!

அக்கிரமமான தீர்ப்பு!

அநியாயமான தீர்ப்பு!

ஊரே கண்டித்தது—அறம் வளர்த்தான் பிள்ளையே வழக்கறிஞருக்கு ஆறுதல் கூறினர், “தாங்கள் தங்கள் கடமையைத் துளியும் குறைவின்றித்தான் செய்தீர்கள்—என்ன செய்யலாம்—இப்படி ஆகுமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை—வருத்தப்படாதீர்கள்” என்றார்.


“இதுபோல ஏமாற்றம் எனக்கு ஏற்பட்டதே இல்லை — சிக்கலற்ற வழக்கு — இதிலே இப்படித் திடுக்கிடத்தக்க தீர்ப்பு கிடைப்பது என்றால், என்னால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை” என்றார் வழக்கறிஞர். சொல்லிவிட்டு, “இவ்விதமான அநியாயத் தீர்ப்புக்கு என்ன காரணம் என்பதே தெரியவில்லை” என்று ஆயாசப்பட்டார்.

வழக்கறிஞரும் மற்றவர்களும் இந்தத் தீர்ப்பை ‘அநியாயம்’ என்று கூறிக் கண்டித்தனரே தவிர, வழக்கு மன்றத் தலைவர், தெளிவுடன் பேசினார்,

“என் தீர்ப்பை ‘அநியாயம்’ என்று கூறுகிறார்களாமே! என்ன அறிவுச் சூன்யம் இவர்களுக்கு! அறம்வளர்த்தான் பிள்ளையின் ‘வக்கீல்’ திறமையாகத்தான் வாதாடினார். திறமையைக் கண்டு, நான் மயங்கி, நீதியிலிருந்து தவறிவிடுவதா?” என்று வழக்கு மன்றத் தலைவர், தன் மனைவியிடம் கூறினார்.

“என்னதான் காரணம், உங்கள் தீர்ப்புக்கு” என்று மனைவி கேட்டார் — வழக்கு மன்றத் தலைவர்,

“கோயில், அறம்



வளர்த்தான் பிள்ளை குடும்பத்தாருக்குச் சொந்தமென்று ஏதேதோ ஆதாரம் காட்டினர், வக்கீல். ஆனால், மறுக்கமுடியாத ஒரு ஆதாரம் எனக்குப் புலப்பட்டது, அதைக் கொண்டுதான், வீராசாமி நாயகர் பக்கம் தீர்ப்பளித்தேன்'' என்று திட்டவட்டமாகக் கூறினர். "என்ன அந்த ஆதாரம்?" என்று அந்த அம்மையார் கேட்டதற்கு அவர், "கோயில், விநாயகர் கோயில்; நான் தர்மகர்த்தாவாக நியமித்திருப்பது வீராசாமி நாயகரை! விநாயகர் கோயிலுக்கு வீராசாமி நாயகர் தர்மகர்த்தா ஆகாமல், வேறு யார் ஆகமுடியும். கோயில் நாயகர் கோவில்! விநாயகர்!! ஆகவே, தர்மகர்த்தாவும் நாயகர்! அதுதானே முறை. பெயரைக் கேட்டதுமே எனக்கு உண்மை புலனாகிவிட்டது. விநாயகர் கோயில், வீராசாமி நாயகர்!" என்று விளக்கமளித்தார்.

அம்மைக்கு முழுத் திருப்தி—தன் கணவன், நியாயம் தவறவில்லை, தவறுததுமட்டுமல்ல, வாதத் திறமையால், நீதியைக் குலைத்திட ஒரு வழக்கறிஞர் முனைந்தபோது, துளியும் விட்டுக்கொடுக்காமல் இருந்தார். அதுவல்லவா நேர்மை! என்றெண்ணிக் களிப்படைந்தார்.

விநாயகர் — என்ற பதத்திலே **நாயகர்** என்று இருக்கிறது.

வீராசாமி நாயகர் என்ற பதத்திலேயும் **நாயகர்** என்று இருக்கிறது.

எனவே, நாயகர் நாயகருக்கே என்று தீர்ப்பளித்தார்,

அத்தகைய தீர்ப்பு அளித்திட வழக்கு மன்றத் தலைவரால் முடிந்ததற்குக் காரணம், அவர் ஒரு துரைமகன்—வெள்ளைக்காரன்.

விநாயகர் என்பதிலே உள்ள **நாயகர்** என்பதற்கும், வீராசாமி நாயகர் என்ற பதத்திலே உள்ள **நாயகர்** என்பதற்கும், பொருள் வேறு வேறு என்பது தெரியாது.

எனவே, அவர், விநாயகர் வீராசாமி நாயகருக்குத்தான் சொந்தம் என்று தீர்ப்பளித்தார்.

ஊரார், இதை அனியாயத் தீர்ப்பு என்று கூறினர்—அவரோ இதைவிட நேர்மையான தீர்ப்பு தர முடியுமா, என்று கேட்டார்—தம் தீர்ப்பு அநியாயமானது என்று ஊரார் கூறினது கேட்டு, கோபித்துக்கொண்டார்.

ஆதாரங்கள் அப்பழுக்கற்றதாக இருந்தாலும், அதை எடுத்துரைக்கும் ஆற்றல் குறைவின்றி இருந்தாலும், வழக்கு மன்றத் தலைவருக்கு, 'பிரச்சினை' புரியவில்லை என்றால், அநியாயத் தீர்ப்புதானே கிடைக்கும்.

பிரச்சினை புரியவேண்டுமானால், வழக்காடும் மக்களுடைய முறை, நெறி, ஆகியவற்றினைத் தெரிந்து கொள்ளத்தக்கவராக, வழக்கு மன்றத் தலைவர் இருக்கவேண்டுமல்லவா!

துரைமகனுக்கு, இங்கு உள்ள ஜாதி அமைப்பு முறைகள் என்ன தெரியும். எனவே, விநாயகர் வீராசாமி நாயகருக்குச் சொந்தம் என்று தீர்ப்பளித்தார்.

கைக்கூலி பெற்றுக்கொண்டு அநியாயத் தீர்ப்பு அளிப்போர் கண்டிக்கப்படவேண்டியவர்கள் — அந்தத் தூய இடத்தைவிட்டு அகற்றப்படவேண்டியவர்கள்.

நியாயம் எது அநியாயம் எது என்று புரிந்துகொள்ளும் திறனற்று அநியாயத் தீர்ப்பு அளிப்போன் என்று எள்ளி நகையாடத் தக்கவன், அந்த இடத்திலிருந்து விரட்டப்படவேண்டியவன்.

கைக்கூலி பெற்றதாலும் அல்ல, மெய் எது பொய் எது என்று ஆய்ந்தறியும் திறனற்றதாலும் அல்ல, வழக்கிலுள்ள பிரச்சினையைப் புரிந்துகொள்வதற்கான மனப்போக்கு கொள்ள முடியாத படி, இனத்தால், மொழியால், பண்பாட்டினால் முற்றிலும் மாறுபட்டவராக இருப்பதால், பிரச்சினையைத் தவறாகப் புரிந்து கொண்டு, நியாயமான தீர்ப்பு என்று எண்ணிக்கொண்டு அநியாயத்தீர்ப்பு அளிப்பவர் குறித்து என்ன எண்ணுவது.

துரைமகனுக்கு, பிரச்சினை புரியவில்லை—புரியாது! எனவேதான் விநாயகர் கோயில் வீராசாமி நாயகருக்குத்தான் சொந்தம் என்று தீர்ப்பளித்தான். தம்பி, திராவிட நாடு திராவிடருக்கு என்று வழக்காடும் நாம், எடுத்துக்காட்டாத ஆதாரமில்லை, விளக்கிக் காட்டாத வரலாறு இல்லை, தேடிக் காட்டாத புள்ளிவிவரமில்லை இவை தமைநாம் எடுத்துரைக்கும் திறன்பற்றியும் யாரும் குறை கூறிவிடுவது முடியாது. வாயாடி வம்பர்கள் — ஒன்றுக்கு ஒன்பது காரணம் காட்டுபவர்கள் — எதையும் கிளறிக்கிளறிக் காட்டுபவர்கள் — என்றெல்லாம் மாற்றார்கள் நம்மைப்பற்றிப் பேசுகிறார்களல்லவா — பிரச்சினையை நாம் அவ்வளவு விளக்கிக் காட்டுகிறோம் என்பதுதானே அதற்குப் பொருள்.

ஆகவே, வழக்கை எடுத்துரைப் பதிலே நாம் ஆற்றலற்றவர்கள் என்று கூறிவிடமுடியாது.

எனினும், விநாயகர் கோயிலுக்கு வீராசாமிநாயகர்தான் தர்மகர்த்தா என்று தீர்ப்புக் கிடைக்கிறது.

எடுத்துக் காட்டுக்காக குறிப்பிடப்படும், விநாயகர் கோயில் வழக்கிலே, தவறான தீர்ப்பு தரப்பட்டதற்குக் காரணம், தீர்ப்பளித்தவர் ஒரு துரைமகன்—பிரச்சினையைப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் உள்ள, அன்னியன்.

நமக்கு நியாயமான தீர்ப்பு கிடைக்காததற்குக் காரணம், அன்னியன், நமது பிரச்சினையை புரிந்துகொள்ளாதவன், வழக்கு மன்றத் தலைவனாக வீற்றிருக்கிறான் என்பதல்ல.

அதுமட்டுமல்ல.

கைக்கூலி வாங்கிக்கொண்டு அநியாயத் தீர்ப்பளிப்போர், கருத்திலே தெளிவற்ற காரணத்தால், வழக்கின் அடிப்படையையே புரிந்துகொள்ளாமல், அநீதியான தீர்ப்பளிப்போர்,

நீதியாகத் தீர்ப்பளித்தால், அக்ரமக்காரன், தன்னை நிந்திப்பான், எதிர்ப்பான், என்ற அச்சத்தால், அநியாயத் தீர்ப்பளிப்போர்—இவ்விதம் எல்லா வகையானவரும், வழக்கு மன்றத்தில் கொலுவீற்றிருக்கிறார்கள். நீண்டகாலமாக, மூடி மறைக்கப்பட்டுப்போன ஒரு கொலை வழக்கில், இறந்துபோனவனுடைய நகத்தின் நுனி, கொலை செய்தவனுடைய சட்டையில் பதிந்து கிடப்பதைக் கண்டு பிடித்து, அந்தத் துப்பினைத் துணைகொண்டு, திறமைசாலி, மேலும் தீவிரமாக வேலைசெய்து, இன்னான்தான் கொலைசெய்திருக்க வேண்டும் என்று கண்டு பிடித்து அவனைக் கூண்டிலேற்றவேண்டும் என்று எண்ணும்போது, அவனே தான் வழக்கு மன்றத் தலைவன் அல்லது போலீசில் உயர்தர அதிகாரி என்பது தெரிந்தால்,

அந்தத் துப்பறிவோனுக்கு எப்படி இருக்கும்?

அதுபோன்ற நிலை, நமக்கு!!

குற்றவாளிகள், கொற்றம் நடத்தும், கொடுமையைக் காணவேண்டி இருக்கிறது.

சாட்சிகளைத் திரட்டவும், அவர்களின் மனமயக்கத்தை, மருட்சியைப் போக்கவும், மிகமிகச் சிரமம் எடுத்துக்கொள்ளவேண்டி நேரிடுகிறது.

வழக்கு மன்றம் வந்திருந்து உண்மை பேசுவதாக ஒப்புக்கொள்ளும் சாட்சிகளிலேயே சிலர், நெருக்கடியான கட்டம் எழுகிறபோது, நெளிந்துவிடுகிறார்கள். பகைக்கு அஞ்சி மாற்றாருடன் கூடிக்கொள்ளும் சாட்சிகளைகூடக் காண நேரிடுகிறது.

இந்தத் தொல்லைகளை எல்லாம் கடந்தான பிறகு, தீர்ப்பளிக்கும் கட்டத்தின்போதோ

கைக்கூலி வாங்குவோர்
கருத்துக்குழப்பம் கொண்டோர்
பிரச்சினைக்குப் புதியவர்கள்
அலசி உண்மை காணமுடியாத அன்னியர்.

என்ற வகையினர் வீற்றிருக்கின்றனர்—விபரீதமான தீர்ப்பு கிடைக்கிறது

இல்லையானால், தம்பி, சிக்கலற்ற வழக்கு நம்முடையது, அப்பழுக்கற்ற ஆதாரம் இருக்கிறது, அதனை எடுத்துரைப்பதிலும் நமது தோழர்கள் ஆற்றல்மிக்கவர்கள், எனினும் நமக்குச் சாதகமான தீர்ப்பு இன்னமும் கிடைக்கவில்லையே — காரணம் என்ன காட்டமுடியும்!!

திராவிட நாடு திராவிடருக்கே என்பது நமது இதயகீதம்—உரிமை முழக்கம்.

திராவிடம் நமது நாடு, முன்னாளில் தனியாட்சியுடன் இருந்த நாடு.

இதை அடிமைக்காடாக்கிவிட்டனர்.

திராவிட நாடு இயற்கை வளம் மிகுந்த நாடு.

இதை வடநாட்டுச் சரக்குக்குச் சந்தையாக்கிவிட்டனர்.

திராவிட நாடு, ஜாதி மத பேதம் எனும் பித்துப் பிள்ளை விளையாட்டு இல்லாததாக இருந்தது—அன்று.

இன்று திராவிடத்தை ஜாதி மத வெறியரின் வேட்டைக்காடு ஆக்கிவிட்டனர்.

திராவிட நாடு பஞ்சமும் பட்டினியும் பசியும் அறியாதிருந்த நாடு.

பருத்திக்கொட்டையும் புளியங்கொட்டையும் கத்தாழைக் கிழங்கும்கூட தின்று வதைபட வைத்து, பஞ்சக்காடு ஆக்கினர்.

திராவிடத்தின் புகழ் தரணி முழுவதும் பரவி இருந்தது—முன்பு

இன்று திராவிடத்தின் 'தலைவிதி' டில்லியில் எழுதப்படுகிறது.

திராவிடம் திக்கெட்டும் முன்பு தீரர்களை அனுப்பிவைத்தது.

இன்று மந்திரிகள் காவடி எடுக்கிறார்கள் டில்லிக்கு.

திராவிடம் தேய்கிறது.

தன்மானம் அழிகிறது.

வீரத் திராவிட மக்களே! விடுதலை வேண்டாமா? பிறப்புரிமையைப் பெறவேண்டாமா? திராவிட நாடு திராவிடருக்கு ஆகவேண்டாமா?

இதனை எடுத்துக் கூறுவதிலே நமது தோழர்கள் திறமையற்றவர்களா என்றால், இல்லை, இல்லை, என்பதை மாற்றாரும் கூறிவிடுவர். நாடெங்கும் நடைபெறும் நமது இயக்க நல்லறிவுப் பிரசாரத்தைக் கேட்போர், மகிழ்கின்றனர், வியப்படைகின்றனர், பாராட்டுகின்றனர்—பொறாமையால் தாக்குண்டு புலம்புவோரும் உளர்.

**நாவலர் நடையில்**
தமிழ் இலக்கியம் ஆட்சி செய்கிறது.

**நடராசன் பேச்சிலோ**
எளிமையும் தோழமையும் சுவை தருகிறது.

**கருணாநிதியின் பேச்சு**
கலை முரசு.

**கண்ணதாசன் பேச்சில்**
காரம் கவிதை வடிவில் கிடைக்கிறது.

**ஆசைத்தம்பியின் பேச்சில்**
அழுத்தந்திருத்தம் அழகு பெறுகிறது.

**சீனுவாசன் பேச்சிலே**
சிந்து பைரவி கேட்கிறது.

**இளங்கோ பேச்சில்**
எதிரியை மடக்கிடும் முடுக்கு தெரிகிறது.

**சம்பத்து பேசுகிறார்**
சம்மட்டி அடி என்கின்றனர் எதிரிகள்.

**M. S. இராமசாமி பேசுகிறார்**
எதிரியின் மனமும் இளகிவிடுகிறது.

**சிற்றரசு பேசுகிறார்**
சீறி வருவோரும் சிரித்தபடி குழைகின்றனர்.

**சத்தியவாணி பேச்சிலே**
சுவையும் சூடும் கலந்து கிடைக்கிறது.

**குடந்தை நீலமேகம்**
அனுபவத்தைக் கொட்டுகிறார்.

**மதுரை முத்து**
தமிழ் மரபாம் வீரத்தை விளக்குகிறார்.

**கோவை இராஜமாணிக்கம்**
கோலோச்சும் வழியே கூறுகிறார்.

**ப. உ. சண்முகம் பேச்சில்**
பண்பும் பயனும் காண்கிறோம்.

**காஞ்சி அண்ணாமலை**
கனிவு பொழிகிறார்.

**தென் ஆற்காட்டிலே சாம்பசிவம்**
சாந்தம் எழப் பேசுகிறார்.

**வடாற்காட்டு முல்லைசத்தி**
எண்ணப் பண்ணைக்கு வண்ணம் தேடி அளிக்கிறார்.

**பராங்குசம் பேசும்போது**
பாட்டாளி படை திரளுகிறது.

**திருச்சி மணி பேசும்போது**
தீ கிளம்பித் தீயோரைக் கருக்கிவிடுகிறது.

**வில்லாளன் பேசுவதிலே**
வீரமும் விவேகமும் காண்கிறோம்.

**தூத்துக்குடி சாமி**
துரத்தி அடிக்கிறார் எதிரிகளை.

**தங்கப்பழம் பேசுகையில்**
மாற்றார் பங்கம் அடைகிறார்கள்.

**சிவசாமி பேசும்போது**
சீறும் மாற்றாரும் சிந்திக்கின்றனர்.

**போளூர் டேவிசினால்**
போகக்கிளம்பும் பேர்வழிகளும், உட்கார்ந்து மகிழ்கிறார்கள்.

**அரக்கோணம் கிருஷ்ணசாமி**
பேசும்போது ஆற்றல் புரியும் வகை அறிகிறோம்.

**மதியழகன் பேச்சு**
மாணவர் உள்ளமெல்லாம் நிறைகிறது.

**பொன்னம்பலனர் பேச்சு**
புகையும் எரிமலை.

**அலமேலு அப்பாதுரையின் பேச்சிலே**
ஆர்வம் கொந்தளிக்கிறது,

**அருண்மொழியும் பூங்கோதையும்**
அழகு தமிழில் அகில உலகப் பிரச்சினைகளைக்கூட அலசிக் காட்டுகிருர்கள்.

யார்தான் அந்த இயக்கத்திலே அழகாக, சுவைபட, பொருள் விளங்க, பயன் கிடைத்திடும் வகையில், பேசாமலிருக்கிருர்கள்—பேசில் வல்லவர்கள், எழுத்தும் அவ்விதமே என்று கூறுதார் இல்லை.

நம்மை நிந்திப்போரும் எதிர்ப்போருங்கூட, நமது நடையைப் பயின்றுகொள்ளவேண்டி வருகிறது.

எனினும் தம்பி, நாம் எடுத்துரைக்கும் வழக்குக்குக் கிடைக்க வேண்டிய நீதியான தீர்ப்பு இன்னும் கிடைக்கவில்லை. காரணம் என்ன என்பதுபற்றியும் எண்ணிப் பார்த்திடவேண்டும் — நீதியான தீர்ப்பு நமக்குக் கிடைத்திடச் செய்யும் வழிவகை யாது என்பதுபற்றியும், நாம் கலந்து பேசித் தீர்மானிக்கவேண்டும்.

மாநில மாநாடு—அத்தகைய தோர் மன்றத்தில் நாமனைவரும் கூடி இருந்து, பிரச்சினைகளையும் நிலைமைகளையும் ஆராய்ந்து முடிவுகள் காணும் வாய்ப்பாகும்.

எனவே திராவிட விடுதலையில் நாட்டம் கொண்டுள்ள எவரும், எந்தக் காரணம் கொண்டும், இந்த வாய்ப்பினை இழந்துவிடக்கூடாது.

தீர்ப்பளிப்போரின் கெடுமதி நமக்குக் கேடு பயப்பதாக உளது என்ருலும், காலம் எனும் பெருமன்றம், உயர்மன்றம் ஒன்றுஉளது —அங்கு எததகைய அநீதியும் துடைக்கப்பட்டுவிடும் — அக்ரமம் அழிக்கப்பட்டே தீரும்—நீதி நிலைநாட்டப்படும். வரலாறு அத்தகைய 'நீதி நிலைநாட்டப்பட்ட' நெறி விளக்க நிகண்டுதானே.

வகுப்பு நீதி சாயக்கண்டு வேதனை அடையும்

**மாணவர்கள்**

வகுப்பு நீதி மாயக்கண்டு திகில் கொள்ளும்

**அதிகாரிகள்**

விலைவாசி விஷமென ஏறுவது கண்டு விம்மிடும்

**நடுத்தர மக்கள்**

சோற்றுக்கு வழியின்றி வேதனைப் படும்

**ஏழை பாழைகள்**

நூலுக்குத் திண்டாடி, கூலிக்குப் போராடி, வாழ்வுக்குத் திண்டாடும்

**நெசவாளர்கள்**

அகவிலையால் அவதிப்பட்டு முதலாளியிடம் குட்டுப்பட்டு தேய்ந்து போகும்

**தொழிலாளர்**

கோழியுடன் எழுந்து கோட்டான் கூவும்போது தூங்கி, காலமெல்லாம் உழைத்து, கால்வயிற்றுக் கூழுக்குக் கலங்கித் தவிக்கும்

**உழவர்கள்**

மக்கள் பணியாற்றச்சென்று அடக்கு முறையால் தாக்கப்பட்டு, வதைக்கப்படும்

**பொது நல ஊழியர்கள்**

இவர்கள் சார்பாகப் பேச, நீதி கேட்க, உரிமைக் கிளர்ச்சி செய்ய, நேர்மையாளர்கள், அறநெறி கொண்டோர் யாரும் இல்லையா, திராவிடத்தில்?

ஆட்சியாளர்களின் போக்கைக் கண்டிக்கும் ஆண்மையாளர்கள் இல்லையா?

இம்மென்ருல் சிறைவாசம் ஏனென்ருல் வனவாசம் என்ற முறையில் நிலைமை இருக்கக் கண்டு அச்சமா?

ஆமையாய், ஊமையாய் வாழ்வதா, தமிழர் வீரம்!

உரிமை வேட்கை கொண்டோரே! ஊருக்குழைக்கும் உத்தமர்காள்! என்ன வழிகாட்டப் போகிறீர்கள். திரண்டெழுந்து வருகிருர்கள் திராவிடப் பெருங்குடி மக்கள், திருச்சியில், மே 17, 18, 19, 20.

திட்டம் தீட்டித்தர வாரீர்!

திருநாட்டை மீட்டிடும் தூய பணியாற்ற வாரீர்!

திராவிடம் அழைக்கிறது.

**மே 17, 18, 19, 20** திருச்சியில் மாநில மாநாடு

அரும்பு கோணிடினும் மணம் குன்ருதன்ரே! கரும்பு கோணிடினும் சுவை கோணுமோ! இரும்பு கோணியே யானையை அடக்கும் ஆயுதம் ஆகிறது. அதுபோல நமது கழகம், 'அகில உலகு' அறிந்ததாக, விளம்பர வனப்புகள் பெற்றதாக இல்லை எனினும் அது கூறும் நீதி நிலைத்தே நிற்கும். நிதி குறைந்திடினும் நீதி குறையாது. நீளப் புகழ் பரப்பி, நெடுமாதத்தில் கொடி கட்டி, நிகர் இல்லை என்று நிகண்டு தீட்டி நீட்டிடினும், நீதி தனை மறக்கும கட்சி, நின்ற சுவர் மாரியில் சரிந்து வீழ்வதே போல், சடுதியில் சாய்ந்தே தீரும்.

தங்கத்தால் கோட்டை கட்டி' வைரம் இழைத்த வாயில் அமைத்து, அதனை எதிர்த்து எவரும் வராதபடி, சுற்றிலும் ஆத்திகமெனும் ஆழி அமைத்து, மதக்குருமார்களெனும் முதலைகளை அதிலே வளர்த்து, கோட்டைமீது பரம்பரை எனும் கொடிமரம் நாட்டி அதிலே படாடோபம் எனும் கொடியைப் பறக்கவிட்டு, பார்ப்போரின் கண் கூசும் பளபளப்புடன், கேட்போர் செவி குடையும் அட்டகாசத்துடன், ஆண்ட கொடுங்கோலனெல்லாம் பகல் பட்டினிகளால், பஞ்சை பனுதைகளால், நொந்த உள்ளத்தினரால், தாக்குண்டு, தகர்ந்து, தரைமீது சிதறிச் சிதறி வீழ்ந்து மண்மேடுகளானது, புராணமல்ல, வரலாறு. அதனை அறிந்தோர் நாம். நாம் கூடுகிறோம், திருச்சியில்.

ஏன் உங்கட்குமட்டும் இந்தத் தொல்லை, எப்படி எதிர்த்து நிற்பீர்கள் அவ்வளவு பெரிய ஆற்றலை, வேண்டுவதைக் கேட்டுப் பெற வாய்ப்பு இருக்கிறதே, வெண்சாமரம் வீசுவோருக்கு வாழ்வில் விருந்தே கிடைக்கிறதே, அதை விட்டு, ஏன் ஆபத்தான வேலையில் ஈடுபடுகிறீர்கள் என்று காங்கிரசின் புதிய காதலர்கள், கேட்கக்கூடச் செய்கின்றனர்.

கூண்டிலடைபட்ட பஞ்சவர்ணக்கிளிக்கு, பழமுதிர்ச் சோலை, பசும் புற்றரைக்கடுத்துள்ள சாலை, பழைய கட்டிடத்தின் சாளரம், தளிர், பூ, செங்கனி ஆகியவற்றின் மீதுதானே கருத்து இருக்கும். சிறகை அடித்தடித்து கூண்டுக்குள் பறந்துவிழும் தத்தை, நித்த நித்தம் தான் பிடிபடுமுன் குலவிய இன்பக் காட்சிகளை எண்ணி எண்ணியே ஏங்கும்.

கொவ்வைக் கனி தருவாள் ஓர் கோகிலம்; கொஞ்சுவாள் மற்றோர் குமரி; தங்க வட்டிலில் பால் தருவாள் இன்னோர் தையல். சுவைமிகு பண்டமும் தந்து பாவையர் அதனெதிர் நின்று முல்லை காட்டி முறுவலித்தாலும, கிளியின் கருத்து மாறாது, பழைய நினைவு கொண்டு, பதறும்; துடிக்கும்; விடுதலை எப்போது என்று கேட்பது போலக் கூண்டுக்குள்ளேயே சிறகடித்துக் கிடக்கும்.

கிளியின் போக்கு இவ்வண்ணம் இருந்திடக் காண்கிறோம். நாமோ, "அறங்கிடைந்த நெஞ்சும், அருளொழுகு கண்ணும், மறங்கிடந்த திண்டோள் வலியும்" கொண்ட மரபினர். நாமா, ஆமையாய் ஊமையாய், ஆளடிமை செய்யும் அடிமையாகிக் கிடப்பது!

உடலெங்கும் இரத்தமயம்! உடையோ சுக்குநூறு! வடுக்களிலிருந்து ஒழுகும் குருதியைத் துடைத்திடவும் கரம் பயன்படவில்லை! தூக்கமுடியவில்லை—கரத்திலேயும் வடு! எனினும் அந்தப் போர் வீரன் முகத்திலே புன்னகை பூத்திருக்கிறது. ஏன்? அவன் காலடியிலே, வாயில்குருதியொழுக பற்கள் கீழே உதிர்ந்து கிடக்க, தோல்கிழிந்து, புலியொன்று பிணமாகக் கிடக்கிறது. புலியுடன் போரிட்ட சிங்கம் அவன். புலியின் பொல்லாப் பற்கள் அவன் உடலெங்கும் புண்ணை ஏற்படுத்திவிட்டன. நகத்தால் கிறியும், பற்களால் கடித்தும், உடலால் மோதியும், புலி, அவன் உயிர்குடிக்கத் துணிந்தது. அவன் தனியன்! இளைஞன்! ஆனால் தமிழன்!! எனவே அவன் புலியினைக் கட்டிப் புரண்டான்—அதன் இடியையும் கடியையும் பொறுத்தான். வாள் ஒடிந்தது—வீரனின் மனம் ஒடியவில்லை. கரத்தால் குத்தினான் — வாயைப்பிளந்தான்—வாலைப்பிடித்திழுத்து, புலியைத் தூக்கிச் சுற்றினான் கரகர வென்று, ஓங்கி அடித்தான் பாறைமீது, புலி சோரக் கூச்சலிட்டுச் செத்தது. குற்றுயிராகக் கிடக்கிறான் குமரன்! அவனைக் கண்டோர், வியந்து "வேங்கையைக் கொன்ற வீரனே, எம் தோழனே, உன்னுடன் பிறந்ததற்காக நாங்கள் உள்ளம் பூரிக்கிறோம். உன்னை, எப்பாடு பட்டேனும், எமது இன்னுயிரை ஈந்தேனும், பிழைத்திடச் செய்வோம்" என்று கூறிப் பெருமைப் படுவர்.

அஃதேபோலத் தம்பி, நெஞ்சில் உரம் உண்டு; கொள்கைக்காக, கொடுமைகளைத் தாங்கிக்கொள்ளும் திறம் உண்டு; அறம் வெல்லும் என்ற நம்பிக்கை எமக்குண்டு; அதற்காக எமது ஆவியைக் கேட்டிடினும் அளித்திடும் திடமனமும் உண்டு என்று கூறி, செயலிலும் செம்மலாகி, மாற்றாரின் சித்திரவதைக்கு ஆளாகினாலும் சித்தம் கலங்காமல் செருமுனையில் நின்றோமானால், இன்று ஆரியத்துக்கும் வடநாட்டாட்சிக்கும் அடங்கிக் கிடப்போரெல்லாம் பெருமிதம் கொள்வர் — பீதி அழிந்தொழியும், அவர்களும், நமது நெறி நிற்கும் துணிவு பெறுவர்—

நாடறியா நடராசன் நமது தமிழ் காக்க நானுழைப்பேன்! — என்று கூறி நடந்தான் சிறைச்சாலை நோக்கி! சென்றுவா மகனே! வென்றுவா! என்று செப்பினார் அவர் தந்தை. பாழும் சிறையிலே, படுத்த படுக்கையிலே. பைந்தமிழ் வீரன், நோயுற்று நொந்தான், மரணம் நேர் வந்து நின்று அணைத்துக்கொண்டது, புகழ் மணம் பரப்பிக்கொண்டு புதல்வன், சிறையினின்றும் வெளிவருவான் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார், வீரனின் தந்தை, மாடியில்லா மண் வீட்டில், பிணம் வந்து சேர்ந்தது! தமிழரின் கண்களிலே வெள்ளம் புரண்டது.

தாலமுத்து என்றோர் தீரன் தீந்தமிழைத் தாக்க ஒரு தில்லு மொழி துணிந்ததா என்றுரைத்து நுழைந்தான் சிறைக்குள்—பிணந்தான் வெளியே எடுத்தெறியப்பட்டது. முழக்கமிட்டுக்கொண்டு சிறைக்குள்ளே நுழைந்தான், மூச்சு போய்விட்டான பிறகே வெளியே அனுப்பினர். இன்னலால் தாக்குண்டாள் இளம் மனைவி. இனி உலகே எனக்கோர் சிறையன்றோ என்று கேட்டு! கண்ணீர் வடித்து நின்றாள். சூழ இருந்தோர் புழுப் போல் துடித்தனர்.

தம்பி! இந்த வீரமும் தியாகமும் வீண் போயிற்றோ! இல்லையே. கட்டாய இந்தி கல்லறை சென்றே விட்டது! கபட இந்திதான் காலாட்டம் நடத்துகிறது!

தாலமுத்துவும் நடராசனும், எந்த கட்டாய இந்தியை எதிர்த்தொழித்திட நடத்தப்பட்ட அறப்போரில் ஈடுபட்டு உயிர் நீத்தனரோ, அந்த கட்டாய இந்தியைப் புகுத்திய, ஆச்சாரியார் இன்று, இந்தி வெறியை, இந்தி ஆதிக்கத்தைக் கண்டிப்பதுடன், பொதுமொழியாக இருக்கும் ஆற்றல் இந்திக்கு இல்லை, ஆங்கிலமே பொது மொழியாதல் வேண்டும் என்று, எடுத்துக் கூறிடவும், நம்மை எல்லாம் அழைத்துப் பேசிடவும் முன்வந்துள்ளார் என்றால், வீரம் வீண்போயிற்று என்று பொருளா! தியாகம் ஒளி விளக்காகிக் காட்டுகிறதே இன்று.

நாமும், தம்பி! நமது ஆற்றல் மூலம், தியாகத்தின் மூலம், விடுதலை விளக்கு ஏற்றி வைத்திட வேண்டும்.

ஏறத்தாழ ஆறுயிரவர் நம்மில் சிறைசென்றவர்களாகிவிட்டோம்.

நூற்றுக்கணக்கானர்களுக்குத் தடியடியும் கிடைத்துவிட்டது.

நமது தோழர்களிலே சிலர், துப்பாக்கிக்கும் பலியாகிவிட்டனர்.

ஆடவரும் கண்டு அஞ்சத்தக்க ஆற்றலைக் காட்டும் ஆரணங்குகள் நமது அணிவகுப்பில் உளர்.

எதையும் தாங்கிக்கொள்ளலாம், அண்ணா, வேல் பாயட்டும் விலாப்புறத்தில், வாள் வீசட்டும் கரத்தில், கழுத்தில், ஆனால் வன்கணாளர் வீசும் இழி மொழியை, பழிச்சொல்லை எப்படித் தாங்கிக்கொள்வது என்று துவக்கத்திலே கேட்டுக் கொண்டிருந்தோரெல்லாம் கூட இன்று, எதையும் தாங்கும் இதயம் உண்டு என்பதைக்காட்டி விட்டனர்.

எனவே தம்பி, விடுதலைக்கிளர்ச்சியிலே வெற்றி பெறுவதற்கான எல்லாம் நம்மிடம் நிரம்ப இருக்கிறது; நாட்டிலே காணக்கிடக்கும், நயவஞ்சகம், ஏமாளித்தனம், ஆகிய வற்றினுக்கு மட்டும் அஞ்சாமல், அளிக்கப்படும் அக்ரமத் தீர்ப்புகளை மாற்றி அமைத்திடும் வழி

## விலகி விட வேண்டும்

திரு. காமராசருக்கு இந்தச் சிறிய காரியங்களைக்கூடச்செய்ய ஆற்றல் இல்லையானால் அவர் மரியாதையாய் முதல் மந்திரி பொறுப்பிலிருந்து விலகி விடுவது அவருக்குக் கண்ணியமாகும். அவரது முதல் மந்திரி பதவிக்குக் கவுரவம் காப்பாற்றப் பட்டதாகும்.

—பெரியார்

அறிவோம் என்று சூள் உரைத்து அறப்போரில் ஈடுபடுவோமானால், நிச்சயம் வெற்றி பேறுவோம் என்பது திண்ணம்.

இந்த உறுதியைக் காட்ட உள்ள உரம் படைத்தோரை, உன் உடன்பிறந்தோரை, உடைமை போயினும் உயிரே போவதாயினும் உரிமையைமட்டும் இழந்திடமாட்டோம் என்று முழக்கமிடும் வீரத் தோழர்களை, உடனழைத்துக் கொண்டு, கோழையையும் வீரனாக்கும் பார்வையுடன், கொல்லும் புலியும் அஞ்சத்தக்க நடையுடன், அரிமாபோல் நோக்கம் கொண்டு, அருமைத் தம்பி! திருச்சிக்கு வந்து சேர், 17, 18, 19, 20. திருச்சி வருவதற்கு முன்பு உனக்கு, நீ இருக்குமிடத்திலும், உலவும்இடங்களிலும் நிரம்ப வேலை இருக்கிறது. திருச்சியில் நடைபெறும் மாநில மாநாடுபற்றி எங்கும் எடுத்துக் கூறவேண்டும் — எல்லா வகையாலும், நாடறியச் செய்திட வேண்டும்.

பெரிய 'இதழ்கள்' ஒரு வரியும் எழுதா!

ரேடியோவில் மூச்சு பேச்சு இராது.

இரயில் நிலயங்களிலே விளம்பரப் பலகைகள் கிடையாது.

உன்னைத்தான் நம்பிக்கொண்டிருக்கிறார்—நமது பொதுச் செயலாளர். எனவே, பேச்சும் எழுத்தும், மாநில மாநாடு பற்றியே இருத்தல் வேண்டும்! பட்டி தொட்டிகளிலும் சேதி பரவிடச் செய்ய வேண்டும். எத்தனை பெரிய இருட்டடிப்பையும் கிழித்துக் கொண்டு வெளிக் கிளம்பும் ஆற்றல் உனக்குண்டு. எனவே தம்பி, இன்றே, புறப்படு நண்பர்களைக் காண, உற்சாகத்துடன் எடுத்துக் கூறு, மாநில மாநாடு பற்றி. எம்மைச் சரியாக அறிந்துகொள்ள வேண்டுமா, வாருங்கள் திருச்சிக்கு வந்து காணுங்கள் எழுச்சியை; எமது பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள ஆவல் கொண்டோரே, திருச்சி வருவீர், எமது தோழர்கள் தரும் தெளிவுரையைச் செவி மடுப்பீர்; இதுகளா என்று ஏளனம் பேசுவோரே, இதுகள் சாதித்திருக்கும் செம்மையை அறிந்து கொள்ள திருச்சி வாரீர்; என்று அனைவரிடமும் எடுத்துக்கூறு. தம்பி! நமது மாநாடு, ஓர் பாசறைமட்டுமல்ல —ஓர் பல்கலைக் கழகம் என்பதையும் அவர்கட்கு எடுத்துச் சொல்லு. சாக்ரடிஸ் முதல் ஷா வரையில் உலகின் பல்வேறு பாகங்களிலே வாழ்ந்து, உலகை வாழவைத்த உத்தமர்கள் பற்றிய விரிவுரைகளென்ன விஞ்ஞான வித்தகர்கள் பற்றிய தெளிவுரைகளென்ன, விடுதலை வரலாறு பற்றிய விளக்க உரைகளென்ன—இவை யாவும், நாலு நாட்கள் நடைபெறும் நமது மாநாட்டிலே, திக்திக்கும் தமிழை எத்திக்கும் பரப்பிடும் சொல்லேர் உழவர்கள் எடுத்துரைத்திடப் போகும் சிறப்பினை அவர்கட்கெல்லாம் எடுத்துக்கூறு.

காவியக் கனிரசமும், ஓவியச் சிறப்பும் உண்டு என்பதனை எடுத்தியம்பு.

கருத்தைத் தெளியவைத்திடும் தேனமுதை கலைவல்லோர் இசை மூலமும் நாடகமூலமும் தர இருக்கும் நேர்த்தியை எடுத்துக்கூறு.

எல்லாவற்றினுக்கும் மேலாக, எந்தையர் நாடு இன்றுள்ள இழிநிலை போக்கப்பட்டு, தனி அரசு பெற்று, தரணியில் ஓர் திலகமெனத் திகழ்வதற்கான வழிவகை பற்றிய பரணி பாடிட ஓர் படை திரண்டு நிற்கும் காட்சியின் மாட்சியினை எடுத்துக் கூறு.

நாட்கள் அதிகமில்லை, தம்பி, நினைவிலிருக்கட்டும்.

பல செலவினங்களை இப்போதே சுருக்கிக்கொள்ளவேண்டும்—வசதிகளைத் தேடிப் பெறவேண்டும்.

திரண்டெழுந்து வந்து, இருண்ட மனத்தினரும் அறிவுச்சுடர் பெறுமளவுக்கு, மாநில மாநாட்டை வெற்றிகரமாக்கி, திராவிடத்திலோர் புத்தொளி எழச் செய்யும் பெரும் பொறுப்பு உன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

ஒளி படைத்த கண்ணினாய்,<br>
வா, வா, வா!<br>
உறுதிகொண்ட மனத்தினாய்,<br>
வா, வா, வா!

என்று உரிமையுடன் அழைக்கிறேன்.

தமிழுண்டு தமிழ்மக்கள் உண்டு<br>
இன்பத்தமிழுக்கு நாளும் செய்வோம்<br>
நல்ல தொண்டு

என்ற பண் எழுப்பி, படை திரட்டிக்கொண்டு, வா.

பாழ்படும் பழமை சூழ்வது திறமா?

**மோசமான தமிழர்**

எனது அனுபவத்தில் தமிழர்களுக்கு அவர்களது அறிவையும் வளர்ச்சியையும் தடுக்கக்கூடிய கெடுதியைச் செய்யத் துணிந்த இவ்வளவு மோசமான ஒரு தமிழரை எந்தப் பதவியிலும் இதுவரை காண வாய்ப்புப் பெறவில்லை.

—பெரியார்.

பகுத்தறிவால் நலம் வருப்பது திறமா?

என்று, நாட்டிலே இன்னமும் நல்லறிவுப் பிரசாரத்தைக் கேட்டுத் தெளிவு பெறாமலிருக்குமிடங்களிலெல்லாம், சென்று கேட்டு—சிந்தனையைக் கிளறிவிட்டு, அவர்களை எல்லாம், திருச்சிக்கு வருக! திரு இடம் இதுவென அறிக என்று கூறி அழைத்து, வா.

நல்ல தீர்ப்பு நமக்குக் கிடைக்க வேண்டும் தம்பி, அதைப் பெற்றுத்தர, உன்னால்தான் முடியும். அந்த நோக்குடன் திருச்சி மாநாட்டுக்கு வந்து எழில் காட்டி, எழுச்சியூட்டி, இன்பத் திராவிடம் காண்பதற்கான வழி வகை தீட்டிச் செயலில் ஈடுபட, உறுதியுடன் வந்து சேர வேண்டுகிறேன்.

நமது நோக்கம் தூய்மையானது —வழக்கு சிக்கலற்றது—ஆதாரம் அப்பழுக்கற்றது; முயற்சியில் நாம் சிறப்புடன் இருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டும் வாய்ப்புதான் திருச்சி மாநாடு—மறவாதே!

"எல்லோர்க்கும் தேசம்,<br>
எல்லோர்க்கும் உடைமை எலாம்<br>
எல்லார்க்கும் எல்லா<br>
உரிமைகளும் ஆகுகவே<br>
எல்லார்க்கும் கல்வி<br>
சுகாதாரம் வாய்த்திடுக<br>
எல்லார்க்கும் நல்ல இதயம்<br>
பொருந்திடுக<br>
வல்லார்க்கும் மற்றுமுள்ள<br>
செல்வர்க்கும் நாட்டுடமை<br>
வாய்க்கரிசி என்னும்<br>
மனப்பான்மை போயொழிக<br>
வில்லார்க்கும் நல்ல நுதல்<br>
மாதர் எல்லார்க்கும்<br>
விடுதலையாம் என்றே<br>
மணிமுரசம் ஆர்ப்பீரே".

அன்பன்,

**அண்ணாத்துரை.**

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அடக்க ஒடுக்கத்தை அமைச்சர் அறியும்படி செய்யவேண்டுமானல், பொதுமக்கள் நினைத்தால் போதும்—நொடியில் நடந்துவிடும்.

கடுமையாகவும் கேவலமாகவும் தாக்கப்பட வேண்டிய வகையில், பி. டி. இராஜன் செய்த குற்றம் என்ன? அமைச்சர் சொல்கிருர், அவர் 'யுத்தப் பிரசாரம்' செய்தாராம்—பிரிட்டிஷாருக்குக் குலாமாக இருந்தாராம்!

அமைச்சர் சுப்ரமணியம், யுத்தப் பிரசாரம் செய்தவர்களை எல்லாம்—பி. டி. இராஜனை மட்டுமல்ல, யுத்தப் பிரசாரம் செய்தவர்களை எல்லாம், 'தள்ளி வைத்துவிட' அதிகாரம் பெற்றவரா? அங்ஙனம் அவர் செய்வதானல், அவர் அமைச்சர் அவையிலேயே அல்லவா 'ஓட்டை' ஏற்படும்.

சுதந்திர இந்தியாவின் முதல் சேனாதிபதி, கரியப்பாவும், முதல் நிதி அமைச்சர் சண்முகமும், முதல் சட்ட மந்திரி அம்பேத்காரும், முதல் பாதுகாப்பு இலாக்கா மந்திரி கோபால்சாமி ஐயங்காரும், யார்?

யுத்தப் பிரசாரத்தில் ஈடுபட்டவர்கள். அல்லது பிரிட்டிஷ் ஆட்சி இருந்தபோது ஒத்துழைத்தவர்கள் ஆகியோரை விலக்கிவிட்டோ, விரட்டிவிட்டோ அல்லது அமைச்சர் கூறியபடி ஒழித்துக்கட்டிவிட்டோ, இவர்கள் ஆட்சியை நடத்துவது என்று ஆரம்பித்திருந்தால், இரயில் ஓடி இருக்குமா, தபால், தந்தி நடைபெற்றிருக்குமா, போலீஸ் நிர்வாகம் நடைபெற்றிருக்குமா, சர்க்கார் யந்திரமே அல்லவா முடக்குவாத நோயால் பீடிக்கப்பட்டுப்போயிருக்கும்! இந்த உண்மை ஊராருக்குத் துளியும் தெரியாது என்று இந்த அமைச்சர் எண்ணிக்கொண்டு பேசுவது.

வேறு நாடுகளில், பி. டி. இராஜன் போன்றவர்களை விட்டு வைத்திருக்கமாட்டார்களாமே!

வேறு எந்த நாட்டிலாவது இப்படிப்பட்ட மந்திரிகளை, காவடி தூக்கிகளை, நாட்டை ஆளவிட்டு வைத்திருப்பார்களா? ஜனநாயகத்தை மதிக்காமல், அடக்குமுறையை அவிழ்த்துவிட்டு, நாட்டில் காட்டுநிலைமை ஏற்படச் செய்துவிட்டால், என்ன நேரிட்டிருக்கும்? ஒவ்வோர் நாட்டில் ஒவ்வோர் முறை!

பர்மாவில், பதைக்கப் பதைக்க மந்திரிகளை, அவர்களுடைய அலுவல் அறையிலேயே அல்லவா சுட்டுக்கொன்ருர்கள்!

வீரம் பேசுகிருர் மந்திரியார்; ஒன்று கூறுகிருேம் அவருக்கு பிரிட்டிஷாரிடமிருந்து சுயாட்சியைப் பெறுகிறபோதே

**எந்தக் கட்சியையும் பழி வாங்கக் கூடாது.**

**அதிகாரிகளை அகற்றக்கூடாது.**

**'பென்ஷன்' உரிமையைப் பறிக்கக்கூடாது.**

**வெள்ளையர் நடத்தும் தொழில்களைத் தடுக்கக்கூடாது.**

**வெள்ளையரின் தேயிலை, காப்பி, ரப்பர் தோட்டங்களைப் பறிமுதல் செய்யக்கூடாது.**

**வெள்ளையர் புதிய தொழில் செய்வதற்குத் தடைபோடக்கூடாது.**

**வெள்ளையர் சம்பாதிக்கும் இலாபத்தை சீமைக்கு எடுத்துச் செல்லத் தடை விதிக்கக்கூடாது.**

என்பன போன்ற ஏற்பாட்டுக்கு இணங்கிய பிறகுதான், இவர்கட்கு, ஆளும் வாய்ப்பு அளிக்கப்பட்டது.

இன்றும், வெள்ளையரிடம் குலவியும், தாஜ்மகாலைக் காட்டியும், செங்கோட்டையில் விருந்தளித்தும், இசையும் நடனமும் இன்ப மூட்டத் தந்தும், இளித்துக்கிடந்து, இரவல் சாமானும், கடனும், பெற்றுத் தான் பிழைப்பு நடத்துகிருர்களே தவிர, வேறென்ன, வாழுகிறதாம்!

வெள்ளையாட்சி இருந்தபோது, வெள்ளையன் மட்டுமே ஆட்டிப் படைக்கவும், ஆளடிமை கொள்ளவும், கடன் கொடுக்கவும், தொழில் நடத்தவும் செய்தனர்.

வீரம் பேசும் இவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, வெள்ளையருடன் போட்டியிட்டுக்கொண்டு அமெரிக்கரும் ஜெர்மானியரும், கனடா நாட்டவரும், பிரன்சுக்காரரும், இங்கு நுழைந்து அமுல் நடத்துகிருர்கள்—இந்த வெட்கக் கேட்டைத் தாங்கிக்கொண்டுள்ளவர்—அதனுல் இலாபம் அடைபவர்—வீரம் பேசுகிருர், வேறு நாடாக இருந்தால், பி. டி. இராஜன் போன்ருரை ஒழித்துக்கட்டிவிட்டிருப்பார்கள் என்று.

கோபுரத்துக் குரங்கு சேட்டை செய்கிறது—வேறென்ன!!

★

# துலாபாரம்!

உடுப்பியிலிருந்து ஒரு சேதி வருகிறது—மதகுரு—பக்தர்கள் புடைசூழ, பரமானந்தத்தோடு, தராசுத் தட்டில் ஏறி உட்காருகிருர். இன்னொரு தட்டிலில் அவருடைய எடைக்கு எடை வெள்ளி கொட்டப் படுகிறது! 3,914 தோலா எடையுள்ள வெள்ளி! துலாபாரம் நடைபெறுகிறது.

துலாபாரத்தோடு முடிந்துவிடவில்லை, கனகாபிஷேகமும் நடைபெற்றிருக்கிறது— அதற்கென அலங்கரிக்கப்பட்ட வசந்த மண்டபத்தில்!

பக்தர்கள் இவரை வாழ்த்துகிருர்கள், "யதுகுலச் சக்கரவர்த்தி மகராஜ்கி ஜே!", என்று.

சக்கரவர்த்தி! மகராஜ்!!—வாழ்த்தே, விசித்திரமாயிருக்கிறது. பெறுபவர், நமது இந்து மார்க்கப் புனிதமூர்த்தி.

பஞ்சபாத்திரம், துளசிமணியாரம் முதலியவைகளும் பார்ப்பனர்களுக்குத் தானமாக, அளிக்கப்பட்டதாம், துலாபாரத்தையொட்டி.

துயரப்படும் மக்களின் நல்வாழ்வுக்குப் பாடுபடும் பொதுநலத் தொண்டர்கள் எங்கே! துடித்துச் சாகும் மக்கள் நிரம்பி வழிவதைக் கண்டும், துலாபாரம் ஏறும் மார்க்கப் போதகர் சுதீந்திர தீர்த்த சுவாமி எங்கே!!

அமெரிக்காவிலுள்ள ஒரு பாதிரியார் அங்கே நடைபெறும் கருப்பர் உரிமைப் போராட்டத்துக்கு ஆதரவு தருகிருர். கர்த்தரின் படைப்பில், உயர்வு தாழ்வே கிடையாது—அலபாமா பல்கலைக் கழகங்கள் ஆதரின் லூசி போன்ருரை அனுமதிக்க மறுப்பது அடாது, கூடாது என்பதாக. இறந்தபின் என் கண்ணின் மணிகளை, குருடர்களுக்குக் கொடுத்து உதவுக! என்கிருர், இன்னொரு பாதிரியார், வேருெரு இடத்திலிருந்து.


நமது மார்க்க போதகரோ, துலாபாரம் ஏறுகிருர்! அவர்களோ, துடிக்கும் மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கப் பணிபுரிவதும் மகேசன் பூசைகளில் ஒன்று என்று கருதுகிருர்கள்-நமது சாமிகளோ, தேவாரத்தையும் திருவாசகத்தையும் படிக்கச்சொல்லிக் கேட்டுவிட்டு திண்டு திமாசுகளுடன் உறங்குவதே மகேசன் பூசை என்று கருதுகின்றனர்!

★

"உலகிலுள்ள மிகப் பெரிய மனிதர்கள் யார்?" என்று பேராசிரியர் பெர்னாட்ஷா உயிரோடிருக்கும்போது, ஒருவர் கேட்டாராம். அதற்கு அவர், ஒன்று பிரபல விஞ்ஞானி ஐன்ஸ்டீன், இரண்டாவது ரஷ்யத் தலைவர் ஸ்டாலின்; மூன்றாவது நாடக ஆசிரியரான நான் என்று பதிலளித்தாராம்! அரசியல்வாதியான ஸ்டாலினைப் பற்றி சிடர்கள் என்னென்னவோ சொல்லுகிறார்கள். ஆனால், இலக்கிய மன்னரான ஷாவைப் பற்றியும விஞ்ஞான வித்தகரான ஐன்ஸ்டீனைப் பற்றியும் யாரும் என்றும் எதுவும் உரைக்கமாட்டார்கள்! ஏனெனில், வினாடிக்கு வினாடி மாறும் அரசியல் அலையின் மூலம் அல்ல அவர்கள் பெரியமனிதர்களானது.

சில ஆண்டுகளுக்கு முன் விஞ்ஞானி ஐன்ஸ்டீன் காலமானபோது உலகமே வருந்திற்று. அவ்வளவு பெரிய ஒப்பற்ற விஞ்ஞானி எங்கே பிறந்தார் தெரியுமா? ஏழைக் குடிலில்!

அவர் பிறக்கும்போது, எந்த அதிசயமும் முளைக்கவில்லை — சராசரி உங்களையும், என்னையும் போலத்தான் பிறந்தார். பள்ளியில் படிக்கும்போது கூட, அவர் சராசரி மாணவர்களைவிட மிக மோசமாகத்தானிருந்தாராம். "மக்கு! இவன் எங்கே முன்னுக்கு வரப்போகிறான்?", என்று ஆசிரியர்கள் ஏச, "ஏன், நம் வயிற்றில் இவன் பிறந்தான்!", என்று தாய் தந்தையர் கவலை கொள்ள, அவ்வளவு அசடாகயிருந்தாராம்.— ஏழ்மையால் தாலாட்டப்பட்ட அச்சிறுவனுக்கு, பிறரைக் கண்டால் மிகவும் கூச்சமாகயிருக்குமாம். எந்த விஷயத்தையும் மிகவும் மெதுவாகத்தான் செய்வாராம். வகுப்பில் கூட கடைசி வரிசையில்தான் அவனுக்கு இடமாம். அப்படி இருந்த சிறுவன்தான், உலகம் போற்றும் ஒப்பற்ற அறிஞன். கணக்கில் நிபுணனாகவும், விஞ்ஞான உலகின் விடிவெள்ளிகளில் ஒருவனாகவும் சிறந்து விளங்கினான். மக்காகயிருந்தவன், எப்படி இம்மாபெரும் அறிஞனானான்?— என்று அவனுடைய நண்பர்கள் நீண்ட காலம் வரையில் ஆச்சரியமடைந்தனராம். அவனே சொல்லுகிறான், "எனக்கே தெரியவில்லை. ஆனால், என் மனது எதில் கவனம் செலுத்தியதோ அதில் ஆழ்ந்து வேலை செய்தேன். அந்த ஒரு துறையைத் தவிர வேறெதிலும் நான் கவனம் செலுத்தவில்லை. ஒருவேளை, என வெற்றியின் இரகசியம் இதுவாகத்தானிருக்க வேண்டும்", என்பதாக.



அவர் கண்டு பிடித்த "ரிலேடிவிடி கொள்கை," புதியதோர் விஞ்ஞான விளக்கமட்டுமல்ல; பெரியதோர் புதிரும் கூட.

ஐன்ஸ்டீனுக்கு வயது ஐம்பது ஆனபோது, ஒப்பற்ற இந்த விஞ்ஞானியை, ஜெர்மனி சிறப்பாகக் கொண்டாடியது. பாட்ஸ்டாம் நகரில் அவருடைய சிலையை வைத்துப் போற்றினர். மாளிகை ஒன்றை வாங்கி வழங்கினர். ஆனால், சில ஆண்டுகளுக்கெல்லாம் இப்படிப போற்றிப் புகழ்ந்த அப்பேரறிஞனை ஓட ஓட விரட்டிற்று ஜெர்மனி! சொத்துக்களையெல்லாம் பறிமுதல் செய்தது, அரசாங்கம். பெல்ஜியத்துக்கு ஓடி, அங்கிருந்து நியுயார்க்போயடைந்தார். கணிதப் பேராசிரியராக அங்கு வாழ்க்கையைத் துவங்கினார்.

"ரிலேடிவிடி கொள்கையைப் பற்றி இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்ட புத்தகங்கள் வந்துள்ளன. ஆனாலும், பலர் அதனைத் தெரிந்துகொள்ளவில்லை. பலரென்ன, என் மனைவியே அதை இன்னும் அறிந்துகொள்ளவில்லை! ஒரு உதாரணம் சொல்லுகிறேன். அழகுள்ள ஒரு மங்கையின் பக்கத்தில் அமர்ந்திருக்கும்போது ஒரு மணி நேரம் ஒரு நிமிடமாகக் கழிந்து விடுகிறது! ஆனால், அடுப்பின் மேல் உங்களைத் தூக்கி உட்கார வைத்தால் ஒரு நிமிடம்கூட ஒரு மணி நேரமாகத் தோன்றுகிறதல்லவா? இதுதான் என் தத்துவம்," என்றார் அவர், ஒருமுறை.

இவருடைய மனைவி பிராவுக்கு இவருடைய போக்குகள் விசித்திரமாகத் தோன்றுமாம். விருந்தாளிகள், நண்பர்கள் முதலியவர்களை அழைத்து வந்து அவள் கிழே பேசிக் கொண்டிருந்தால், அவர் கர்ண கடூரமாகப் பாய்வாராம். "கொஞ்சங்கூட நிம்மதியாகயிருந்து என் வேலையைச் செய்ய விடமாட்டேன் என்கிறாயே," என்று பாய்வாராம். அப்போது, அவள் எதிர்த்து ஒரு வார்த்தை பேசினாலும், ரகளைதானாம்! அதனால், கணவன் மனதறிந்து, ஒதுங்கிப்போய் விடுவாராம். வேலை முடிந்துவிட்டால், ஐன்ஸ்டீன், குழந்தையைப் போல பழகுவாராம்.

ஐன்ஸ்டீனுக்கு எளிய வாழ்க்கையே எப்போதும் பிடிக்கும்! வெளியில் போகும்போது, 'இவ்வளவு பெரிய விஞ்ஞானியாயிற்றே!,' என்று கருதி விசேட மரியாதைகளும் வணக்கங்களும் செய்தால், அவர்களை வெறுப்போடு நடத்துவாராம். ஆடம்பரமான உடை, அறுசுவை உணவு, இவைகளில் சற்றும் ஆசை கொள்ளாதவர் அவர். "நான் ஏன் இவ்வளவு ஆனந்தமாக இருக்கிறேன் தெரியுமா? இது இல்லையே, அது இல்லையே என்கிற கவலைகள் எனக்கில்லை. அதற்குக் சாரணம், என்னுடைய தேவைகள் மிகவும் கொஞ்சம். அதனால், இன்னொருத்தரிடம் கையைக் கட்டிக் கெஞ்சும் அவசியம் ஏற்படவில்லை. இதுதானே மனிதனுக்கு ஆனந்தமானது!", என்று ஒருமுறை சொன்னாராம.

உலகமே வியக்கும் இவர் ஒரு தடவை டிராமில் போய்க்கொண்டிருந்தபோது, கண்டக்டர் டிக்கட்டையும் மீதிச் சில்லரையையும் கொடுத்தானாம். கையில் வாங்கிய அவர், 'சில்லரை சரியாக இல்லைபோலிருக்கிறதே', என்றாராம். அதைக் கேட்ட கண்டக்டர், "ஏன்யா உனக்கு கணக்கே தெரியாதோ? எண்ணிப் பாரேன்!", என்றானாம். உலகம் போற்றும் கணித மேதையாயிருந்தால் அவனுக்கென்ன!! பிறகு விபரம் அறிந்ததும், அவன் வெட்கமடைந்தானாம். ஆனால், அவன் எண்ணிக்கொடுத்த சில்லரை, சரியாக இருந்ததாம்! ஐன்ஸ்டீன் தான் அவனிடம் கணக்கில் தோற்றுவிட்டார்!!

"வண்டு"

# திருச்சி அழைக்கிறது

வீரப்படை வரிசை காட்ட! வெற்றி முரசு கொட்ட!

## தி. மு. க. 2-வது

# மாநில மாநாடு கூடுகிறது

## மே 17, 18, 19, 20 தேதிகளில்

திருச்சி, (பெரிய) புகைவண்டி நிலையத்துக்கு

அருகாமையில் உள்ள

## பந்தயத் திடலில்

தலைவர்:

பொதுச் செயலாளர் **இரா. நெடுஞ்செழியன்**

திறப்பாளர்:

சேலம் மாவட்ட செயலாளர் **ஜி. பி. சோமசுந்தரம்**

வரவேற்புக் கழகத் தலைவர்:

திருச்சி மாவட்ட செயலாளர் **அம்பில் தர்மலிங்கம்**

கலைவாணர்கள்:— என். எஸ். கிருஷ்ணன், திருவாவடுதுறை டி. என். இராசரத்தினம், கே. ஆர். இராமசாமி, எம். ஜி. இராமச்சந்திரன், எஸ். எஸ். இராஜேந்திரன், இன்னும் பலர் அளிக்கும் கலை விருந்து உண்டு.

**இப்போதே, தயாராகுங்கள்!**

**இலட்சக் கணக்கில், வரத் தயாராகுங்கள்!!**